بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحْمَدُهٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 16-17

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஷவ்வால் 27 - 05 துல்கஅதா

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஷஹாதத் 16- 23 ★ 16- 23 ஏப்ரல் - 2026


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَقَدۡ کَتَبۡنَا فِی الزَّبُوۡرِ مِنۡۢ بَعۡدِ الذِّکۡرِ

اَنَّ الۡاَرۡضَ یَرِثُہَا عِبَادِیَ الصّٰلِحُوۡنَ ○

اِنَّ فِیۡ ہٰذَا لَبَلٰغًا لِّقَوۡمٍ عٰبِدِیۡنَ ○

وَمَاۤ اَرۡسَلۡنٰکَ اِلَّا رَحۡمَۃً لِّلۡعٰلَمِیۡنَ ○

(தாவூதின்) சங்கீதத்தில், சில அறிவுரைகளைக் கூறியதன் பின்னர் (புனிதப்) பூமிக்கு என்னுடைய நல்லடியார்கள் வாரிசுகளாவார்கள் என்று வரைந்துள்ளோம். (இறைவனை) வணங்கும் சமுதாயத்தினருக்கு இ(வ்விஷயத்)தில் ஒரு தூதுச் செய்தி உள்ளது. நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பினோம். (21: 106-108)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து-ல்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

## அரேபியர்களின் அழிவைக் குறித்த முன்னறிவிப்பு

عَنْ اُمِّ الْمُؤْمِنِيْنَ زَيْنَبَ بِنْتِ جَحْشٍ رَضِيَ اللهُ عَنْهَا اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ دَخَلَ

عَلَيْهَا فَزِعًا يَقُوْلُ : لَآ اِلٰهَ اِلَّا اللهُ وَيْلٌ لِلْعَرَبِ مِنْ شَرٍّ قَدِ اقْتَرَبَ فُتِحَ الْيَوْمَ مِنْ رَدْمِ يَأْجُوْجَ

وَمَاجُوْجَ مِثْلُ هٰذِهِ ۔ وَحَلَّقَ بِاِصْبَعَيْهِ الْاِبْهَامِ وَالَّتِيْ تَلِيْهَا فَقُلْتُ يَا رَسُوْلَ اللهِ اَنَهْلِكُ وَفِيْنَا

الصَّالِحُوْنَ: قَالَ نَعَمْ اِذَا كَثُرَ الْخَبَثُ

ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதற்றமடைந்தவாறு தம்மிடம் வந்தார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லை. அருகாமையில் வந்திருக்கின்ற அந்தத் தீங்கு மற்றும் தீமையின் காரணமாக அரேபியர்களுக்கு அழிவும் நாசமும் உண்டாகட்டுமாக! இன்று யஃஜூஜ் மஃஜூஜ் உடைய சுவரில் இவ்வளவு ஓட்டை திறந்திருக்கின்றது. அன்னார் (ஸல்) ( அதனை விளக்குவதற்காக) தமது இரு விரல்களை அதாவது கட்டை விரல் மற்றும் அதனுடன் இணைந்திருக்கும் விரலை வளையம் போன்று ஆக்கிக் கொண்டார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களில் நல்லவர்களும் இருக்கும் நிலையிலும் நாங்கள் அழிந்து விடுவோமா? என்று நான் கேட்டேன். அதற்கு, ஆம்! அசுத்தமும், தீமையும் மேலோங்கிவிடும்போதும், அது நன்மையை விட மேலோங்கி விடும் நிலையிலும் அவ்வாறு நிகழும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

* * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## பைத்துல் முகத்தஸின் வாரிசுகள் நல்லடியார்கள் ஆவர்

'அர்ழ் (பூமி) என்பது சிரியாவின் பூமியாகும் என்று இந்த வசனத்திலிருந்து தெளிவாகத் தெரிய வருகிறது. அதன் வாரிசுகள் நல்லடியார்கள் ஆவர். அவை தற்போது வரை முஸ்லிம்களின் வசம் உள்ளன. இறைவன் يَرِثُهَا என்று கூறியுள்ளான். يَمْلِكُهَا என்று கூறவில்லை. இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், முஸ்லிம்களே அதன் வாரிசுகளாக இருப்பார்கள், ஒருவேளை இது ஒருநேரத்தில் வேறு ஒருவருடைய ஆதிக்கத்தின் கீழ் சென்று விட்டாலும் கூட, அந்த ஆதிக்கம் எத்தகையதாக இருக்கும் என்றால், அது தமது பொருளின் கட்டுப்பாட்டை அடமானம் பெறுபவரிடம் அடமானம் வைப்பவர் கொடுத்து விடுவதைப் போன்றதுதான். இது இறைவனின் முன்னறிவிப்பின் மகத்துவமாகும். சிரியாவின் பூமி நபிமார்களின் பூமியாக இருக்கின்றது. எனவே அதற்கு அந்நியர்கள் வாரிசாக இருந்து, அதன் கண்ணியம் குறைவதை இறைவன் விரும்பவில்லை. கூறினான்:

يَرِثُهَا عِبَادِيَ الصَّالِحُوْنَ

(எனது நல்லடியார்கள் அதை வாரிசாகப் பெறுவார்கள்) ஸாலிஹீன் என்பதன் பொருள், குறைந்தபட்சம் தகுதியின் அடிப்படையில் செயல்பாடு அமைந்திருக்க வேண்டும். நம்பிக்கையாளர் திருக்குர்ஆனில் மூன்று நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அநீதியாளர், நடுத்தரமானவர், நன்மைகளில் முந்துபவர். இவர்கள் இஸ்லாத்தில்தான் இருக்கின்றனர். எனினும், இவை அவர்களின் படித்தரங்களாகும். அநீதியாளர் யாரென்றால், அவரிடத்தில் இன்னும் ஏராளமான தவறுகளும், பலவீனங்களும் இருக்கின்றன. நடுத்தரமானவர் என்பவர் தனது மனதுடனும் ஷைத்தானுடனும் போராடுபவர் ஆவார். சில நேரங்களில் இவர் வெற்றி பெறுவார். சில நேரங்களில் தோற்றுப்போவார். இவரிடம் சில தவறுகளும் இருக்கின்றன. சில தகுதிகளும் இருக்கின்றன. நன்மைகளில் முந்துபவர்: இவர் மேற்கண்ட இரண்டு நிலைகளிலிருந்தும் வெளியேறி, நன்மைகள் செய்வதில் முன்னேறிச் சென்று விடுபவரும்; மேலும் முற்றிலும் தகுதிப் படைத்தவரும் ஆவார். இவர் தனது மனதையும் ஷைத்தானையும் வென்றவர் ஆவார். திருக்குர்ஆன் இவர்கள் அனைவரையும் முஸ்லிம்கள் என்றே கூறுகின்றது.

(அல்ஹகம், தொகுதி 6, இதழ் 40, நவம்பர் 10, 1902-ம் ஆண்டு, பக்கம் - 7)

* * * * * * * * * *

தஃப்ஸீரே கபீரிருந்து

## இபாதுஸ் ஸாலிஹீன்' - நல்லடியார்கள் புனித பூமியின் வாரிசுகளாக இருப்பர்

وَّقُلۡنَا مِنۡۢ بَعۡدِہٖ لِبَنِیۡۤ اِسۡرَآءِیۡلَ اسۡکُنُوا الۡاَرۡضَ فَاِذَا جَآءَ وَعۡدُ الۡاٰخِرَۃِ جِئۡنَا بِکُمۡ لَفِیۡفًا (17:105)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

اسْكُنُوا الْاَرْضَ என்பதன் பொருள் எகிப்தின் பூமி அல்ல. ஏனெனில், எகிப்திலோ அவர்கள் வசித்திருக்கவில்லை. இதன் பொருள் கன்ஆன் தேசம் (பாலஸ்தீனம்) ஆகும். அதாவது அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட அந்த நாடாகும். ஒருவகையில் அல்-அர்ழ் என்பது வாக்களிக்கப்பட்ட பூமியாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மூஸா (அலை) அவர்கள் மீது வழங்கப்பட்ட சிறப்பு இதுவாகும். அதாவது அன்னாருக்கு கிடைத்த அந்த இடம் என்பது எகிப்தைப் போன்ற இடமாக இருந்தது. அது எகிப்து தேசமாக இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த இடம் என்பது முற்றிலும் அன்னாரின் தேசமாக இருந்தது. பின்னர் எதிரியின் தேசமும் கைக்கு வந்தது. فَاِذَا جَآءَ وَعْدُ الْاٰخِرَةِ

அதாவது, தற்போது நீர் கன்ஆன் செல்வீராக! ஆனால், ஒருகாலத்திற்குப் பிறகு உமக்கு அங்கிருந்து வெளியேற நேரிடும். பின்னர் இறைவன் உம்மை மீண்டும் கொண்டு வருவான். பின்னர் நீங்கள் கீழ்படியாமை செய்வீர்கள். மேலும் இரண்டாவது முறை தண்டனை வரும். அதன் பிறகு

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்..

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## இல்ஹாமின் ஒளியில் நீதி நெறி தீர்ப்பவரின் தீர்ப்புகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் முஹ்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள், இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களைப் பற்றிய நற்செய்தியை வழங்கியவாறு, அவர் இந்த உம்மத்தில் 'ஹகம்' மற்றும் 'அத்ல் அதாவது நீதி நெறி தீர்ப்பவர் என்ற அந்தஸ்துடன் வருவார் என்று கூறியிருந்தார்கள். அந்த அருளுக்குரிய ஹதீஸின் வார்த்தைகள் பின்வருமாறு:

يُوشِكُ مَنْ عَاشَ مِنْكُمْ أَنْ يَلْقَى عِيسَى ابْنَ مَرْيَمَ إِمَامًا مَهْدِيًّا وَحَكَمًا عَدْلًا، فَيَكْسِرَ الصَّلِيبَ، وَيَقْتُلَ الْخِنْزِيرَ

உங்களில் எவர் உயிருடன் இருப்பாரோ அவர் மர்யமின் மகன் ஈஸாவைச் சந்திக்கட்டும். அவர் இமாம் மஹ்தியாகவும், ஹகம் மற்றும் அத்ல்-ஆகவும் இருப்பார். அவர் உம்மத்துடைய கருத்துவேறுபாடுகளில் தீர்ப்பளிப்பார்; அவர் சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார்.'
(முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், பாகம் 2, பக்கம் 411, ஹசரத் அபூ ஹுரைரா மூலம்)

அதாவது, உங்களில் உயிருடன் இருப்பவர்கள் மர்யமின் மகன் ஈஸாவைச் சந்திப்பது சமீபமாகும். அவர் இமாம் மஹ்தியாகவும், நீதிநெறி தீர்ப்பவராகவும் இருப்பார். அவர் உம்மத்தின் கருத்து வேறுபாடுகளில் தீர்ப்பளிப்பார்; அவர் சிலுவையை முறிப்பார்; மேலும் பன்றியைக் கொல்வார்.

மேற்குறிப்பிட்ட ஹதீஸில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் 'ஹகம்' மற்றும் 'அத்ல்' ஆக இருப்பார் என்று கூறப்பட்டதன் தெளிவான பொருள் என்னவென்றால், அவரது காலத்தில் முஸ்ம்லிகளிடையே ஏராளமான பிரிவுகள் தோன்றும், அவர்களுக்கிடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் ஏற்படும். அவர்கள் இஸ்லாமியக் கொள்கைகள் மற்றும் கட்டளைகளைப் புரிந்துகொள்வதில் தவறான புரிதலுக்கு இரையாகி விடுவார்கள், அந்த வேறுபாடுகளைக் களைவதற்கு ஆலிம்களிடம் ஆற்றல் இருக்காது. அப்போது இறைவனின் பிரதிநிதியாக திகழும் இமாம் மஹ்தி இறை வஹீயின் ஒளியில் அவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை களைந்து விடுவார்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை அல்லாஹ் இமாம் மஹ்தியாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் ஆக்கி நீதி நெறி தீர்ப்பவர்' என்ற அந்தஸ்தில் நியமித்தபோதோ, முஸ்லிம் பிரிவினரிடையே பரஸ்பரம் எவ்வளவு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டிருந்தன என்றால். பொது மக்கள் மட்டுமின்றி, ஆலிம்களும் ஒருவரையொருவர் தாக்குவதில் ஈடுபட்டிருந்தனர். அவரவர் சுயமாக உருவாக்கிக் கொண்ட கொள்கைகளை கைவிடுவதற்கு எவரும் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல; மாறாக, எதிர்நிலை கருத்தில் இருப்பவர்களுக்கு புரிய வைப்பதற்கு பகரமாக, முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுபவர்களே சக முஸ்லிம்களுடன் வாளேந்தி செய்யப்படும் ஜிஹாதில் ஈடுபட்டிருந்தனர். தற்போதும் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும், சின்னச் சின்ன விஷயங்களில் ஒருவர் மற்றவரை முர்தத் என்று அறிவித்து தலையை வெட்டிக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இறைவனின் கட்டளை மற்றும் இறை வஹீயின் ஒளியில் செய்த அந்தச் சீர்திருத்தங்களைப் பற்றி நாம் பார்ப்போம். அன்னார் (அலை) தோன்றுவதற்கு முன் முஸ்லிம்களிடையே சில தவறான கொள்கைகள் பரவியிருந்தன. மேலும், அன்னார் (அலை) அவற்றை சீர்திருத்தம் செய்தார்கள். உதாரணமாக, முஸ்லிம்களிடையே கிறிஸ்தவர்களின் தாக்கத்தால் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிற்கு எதிரான ஒரு கொள்கை உருவாகியிருந்தது. அதாவது, ஈஸா (அலை) அவர்கள் பூத உடலுடன் விண்ணில் உயிருடன் உள்ளார்கள் என்றும், மேலும், முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்காக அவர்களே மீண்டும் தமது அதே பூத உடலுடன் விண்ணிருந்து இறங்கி வருவார்கள் என்றும் ஒரு நம்பிக்கை முஸ்லிம்களிடம் பரவியிருந்தது.

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மசீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் திருக்குர்ஆனிருந்து எத்தகைய 30 சான்றுகளைக் கற்றுக் கொடுத்தான் என்றால், அவற்றின் மூலம் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் சிலுவை மரணத்திருந்து காப்பாற்றிவிட்டான் என்பதும், அன்னார் இஸ்ரேய கோத்திரத்தின் காணாமல் போன ஆடுகளைத் தேடி ஹிஜ்ரத் செய்து புறப்பட்டார்கள். மேலும் 120 வயதில் காஷ்மீரில் அன்னார் மரணமடைந்தார்கள்; மேலும் அங்கு ஸ்ரீநகர் கான்யார் வீதியில் அன்னாரது கல்லறை இன்றும் உள்ளது என்பதும் பட்டப் பகலை போல நிரூபணமாகி விட்டது.

எங்கு அன்னார் (அலை) திருக்குர்ஆன் வசனங்களின் மூலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபணம் செய்தார்களோ அங்கு இறை வஹீயின் ஒளியில் வரலாற்று சான்றுகளின் மூலம், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை மரணத்திருந்து தப்பித்து ஆஃப்கானிஸ்தான் வழியாக காஷ்மீர் வந்தடைந்தார்கள் என்பதையும், மேலும் இறுதியாக அங்கேயே மரணமடைந்தார்கள் என்பதையும் அன்னார் (அலை) நிரூபணம் செய்தார்கள். இன்று முஸ்லிம் அல்லாத அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபணம் செய்து வருகின்றனர். மேலும், எப்படிப்பட்ட ஆய்வுகளையும் வெளியிட்டுள்ளார்கள் என்றால், அவற்றின் மூலம் ஈஸா (அலை) அவர்கள் காஷ்மீருக்குப் புலம்பெயர்ந்தது நிரூபணமாகின்றது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்ததன் மூலம், (நவூதுபில்லாஹ்) ஈஸா மஸீஹ் இறைவனும்,இறை மகனும் ஆவார் என்ற கிறிஸ்துவத்தின் பொய்யான கொள்கையை அன்னார் (அலை) முற்றிலும் தகர்த்து விட்டார்கள். மேலும், ஈஸா (அலை) பூத உடலுடன் விண்ணிற்குச் சென்றுள்ளார்; மேலும் அதே பூத உடலுடன் மீண்டும் விண்ணிருந்து இறங்குவார் என்ற முஸ்லிம்களின் நம்பிக்கை தவறானதாகும் என்பதையும் அன்னார் (அலை) அறிவித்தார்கள். இந்த மகத்துவ மிக்க உண்மைத்துவத்தை வெளிப்படுத்திய பிறகு, தற்போது ஞானம் மிக்க முஸ்லிம்களும், கிறித்தவர்களும் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் மீது ஈமான் கொண்டு வருகின்றனர். எவர்களுக்கு இந்த நற்பேறு கிடைக்கவில்லையோ, அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் வருகையின் கொள்கையை நிராகரித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் கொள்கையை ஒரு கட்டுக்கதை என்று கூறி வருகின்றனர். அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை மட்டும் பொய்ப்படுத்தவில்லை. மாறாக, இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த மற்றும் இறை வஹீயின் மூலம் அன்னாரின் வருகை குறித்து தகவல் வழங்கிக் கொண்டிருந்த உம்மத்தின் அந்த ஆயிரக்கணக்கான சான்றோர்களையும் பொய்ப்படுத்துகின்றனர்.

(2) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இனி கியாமத் நாள் வரை எந்த நபியும் வர முடியாது; வருபவர் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே என்ற மற்றொரு தவறான புரிதல் முஸ்லிம்களிடையே பரவியிருந்தது.

நபித்துவம் என்பது ஓர் அந்தஸ்தாகும்; அதனை அல்லாஹ் தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தினருக்கு மட்டுமே உரியதாக ஆக்கிவிட்டான் என்பதை அன்னார் (அலை) திருக்குர்ஆனின் சான்றுகளுடன் நிரூபணம் செய்தார்கள். மேலும் கூறினார்கள்: நான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அடிமையாவேன்; எனவே அந்த அடிமைத்தனத்தின் அருளினாலேயே அல்லாஹ் எனக்கு நபித்துவ அருளையும், இறை வஹீ மற்றும் 'உரையாடல் பெறும் அந்தஸ்தையும் வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதித் தூதர் ஆவார்கள்; அன்னாருக்குப் பிறகு இனி எந்த நபியும் வரமுடியாது; ஆனால், பனீ இஸ்ராயீல் நபியான ஹஸ்ரத் ஈஸா (அலை), முஹம்மதிய்ய உம்மத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபியாக வருவார் என்று முஸ்லிம் பிரிவினர் நம்புகின்றனர். அதேநேரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் அன்னாரைப் பின்பற்றி, அன்னாரின் அடிமைத்துவத்தில் உம்மத்தீ நபியாக வருபவரை முஸ்லிம்கள் நிராகரிக்கின்றனர். இந்த தவறான கொள்கையின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிக்கும் குற்றத்தை முஸ்லிம்கள் இழைத்து வருகின்றனர் என்று முஸ்லிம்களுக்கு அவர்களின் தவறுகளை குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவித்து கொடுத்தார்கள். அன்னார் (அலை) கூறினார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சாராதவனாக இருந்திருந்தால், மேலும் அன்னாரைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், அந்நிலையில் எனது நற்செயல்கள் உலகின் அனைத்து மலைகளுக்கும் நிகராக இருந்திருந்தாலும் கூட இந்த கண்ணியத்தை, இறைவனிடம் உரையாடுகின்ற மற்றும் பேசுகின்ற இந்த கண்ணியத்தை நான் ஒருபோதும் பெற்றிருக்க மாட்டேன்.(தஜல்லியாத்தே இலாஹியா)

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஏகத்துவத்தை நிலைநாட்டுவது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்விலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

எல்லா நபிமார்களும் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காகத்தான் உலகிற்கு வந்தனர்

இறை வணக்கத்திற்கான எந்த வழிமுறைகளைப் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தானோ, மேலும், எவ்வாறு அன்னார் (ஸல்) தவ்ஹீதின் தரத்திற்கான உரிமையை நிறைவேற்றியவாறு இபாதத் செய்தார்களோ, அதில் நூற்றில் ஒரு பங்கு கூட பிற மார்க்கங்களில் எவரிடமும் தென்படுவதில்லை

ஐயமின்றி, நம்முடைய நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதன் அடிப்படையில் இரண்டாம் ஆதமாக இருந்தார்கள். அன்னார்தான் உண்மையான ஆதம் ஆவார்கள் என்றே சொல்ல வேண்டும்

தவ்ஹீதுக்கான தூதுச் செய்தியை நாம் எட்ட வைக்கின்ற அதே வேளையில், நம்முடைய ஆன்மிக நல்லொழுக்க நிலைமைகளிலும் ஒரு தெளிவான மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசல் 27 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **27 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

எல்லா நபிமார்களும் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காகத்தான் உலகிற்கு வந்தார்கள். அவர்கள் தம்முடைய சமுதாயங்களுக்கு அதைப் போதித்தார்கள். ஆனால், பெரும்பாலான மக்கள் பேறிழந்த நிலையால் அந்தத் தவ்ஹீதை விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் இந்தத் தூதுச் செய்தியைத்தான் கொண்டு வந்தார்கள். இந்தப் பணியைத் தொடர்வதற்காகவே வந்தார்கள். தவ்ஹீதின் இந்த ஆன்மாவையே தம்மை ஏற்றுக் கொள்பவர்களிடம் உருவாக்குவதற்காக வந்தார்கள். இதில் பெருமானார் (ஸல்) அவர்களுடைய தரமாக இருக்கும் அந்தத் தரம் வேறு எவருக்கும் கிடையாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தவ்ஹீதை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தினார்கள் எனில், அல்லாஹ்விடமிருந்து அறிவைப் பெற்று தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதற்கான சான்றுகளை வழங்கினார்கள். அன்னார் (ஸல்) ஷிர்கிற்கு எதிராகக் கடுமையாகப் போராடினார்கள் என்றால், சான்றில்லாமல் போராடவில்லை. மாறாக, ஷிர்க்கின் தீமையைப் புரிய வைத்தார்கள். அதைப் புரிய வைத்து, அதற்கு எதிராக வெறுப்பை உருவாக்கினார்கள். மேலும், அன்னாரைப் பின்பற்றுபவர்கள் தவ்ஹீதுக்கான போதனையும், ஷிர்க்கின் மீதான வெறுப்பும் தங்களுடைய நாடி நரம்புகளில் குடியேறி விட்டது என்பதைத் தங்களுடைய அமல்கள் மூலமாக நிரூபித்துக் காட்டினார்கள்.

இது எதனால் என்றால், அல்லாஹ் அன்னார் (ஸல்) மீது இறக்கிய போதனை எந்த அளவுக்கு அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தது என்றால் அதன் ஆழத்தை ஒருவர் புரிந்து கொண்டு, பிறகு அதை விட்டுப் பிரிய முடியும் என்பதற்கான பேச்சுக்கே இடமிருக்கவில்லை என்பதனால் ஆகும். அன்னாரைப் பின்பற்றுபவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்திய அன்னாருடைய போதனை, ஏன் தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது? என்றால், சுயமே அன்னாரது ஒவ்வொரு சொல்லும், செயலும் இதன் உண்மையான வடிவமாக இருந்தது.

இது தொடர்பாக அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய மாபெரும் போதனைக்கு அன்னார் (ஸல்) செயல் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அன்னாருக்கு எதைக் குறித்தாவது கவலை இருந்தது என்றால், அது, பிற சமுதாயங்கள் தம் நபிமார்களை ஸஜ்தாவுக்கான இடமாக ஆக்கிக் கொண்டது போன்று முஸ்லிம் உம்மத்திலும் இந்த அச்சுறுத்தும் குற்றம் உருவாகி விடக் கூடாது என்பது பற்றித்தான் இருந்தது. மாநபி (ஸல்) அவர்கள் எக்காலத்திலும் தாம் இறைவனுக்கு நிகராகக் கொண்டு வரப்படுவதை விட்டும் அடைக்கலம் தேடினார்கள். இது குறித்து அன்னார் (ஸல்) உம்மத்துக்கு, என்னை ஒருபோதும் இணைவைப்புக்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். (முஸன்னத் அஹ்மது பின் ஹன்பல், தொகுதி 3, பக்கம் 54, ஹதீஸ் எண்: 7352, ஆலமுல் குதுப், பெய்ரூத் 1998)

இறைவனைத் தவிர வேறு எவர் மீதும் உங்களுடைய பார்வை ஒருபோதும் படக் கூடாது என்று அறிவுரையும் கூறினார்கள்.

கடந்த குத்பாக்களில் நான் இறைவன் மீதான அன்பு பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அல்லது இறை வணக்கங்கள் பற்றிக் கூறியிருந்தேன். அதில் கூறப்பட்டிருந்த எந்த விஷயங்களானும் சரி! எடுத்துரைக்கப்பட்ட பெருமானார் (ஸல்) அவர்களின் எந்த நிகழ்வானாலும் சரி! அது ஓரிறைக் கொள்கையின் பக்கமே வழிநடத்துவதாக இருந்தது. அல்லது அதில் ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக அன்னாரது ஓர் எழுச்சி காணப்பட்டது; ஒரு துடிப்பு காணப்பட்டது. இது அன்னார் (ஸல்) ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டியதற்கான உயர்தரமான தரத்தைக் காட்டுகின்றது. அல்லாஹ் அதைக் குழந்தைப் பருவத்தில் இருந்தே அன்னாருடையதாக ஆக்கினான். அதே வேளையில், அல்லாஹ் இறக்கிய போதனையான முழுமையான போதனையின் மூலமாகவும் நாம் அதன் ஆழம் குறித்து அறிய முடிகிறது. திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்களில் நமக்கு தவ்ஹீதுக்கான (ஓரிறைக் கொள்கைக்கான) போதனை வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து அல்லாஹ் சூரா அன்பியாவில் இவ்வாறு கூறுகிறான்:

وَمَآ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ اِلَّا نُوْحِيْٓ اِلَيْهِ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّآ اَنَا فَاعْبُدُوْنِ .

பொருள்: மேலும், நாம் உமக்கு முன்னர் எத்தனை தூதர்களை அனுப்பியுள்ளோமோ அவர்களுள் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை; எனவே நீங்கள் என்னை (மட்டுமே) வணங்குங்கள் என்றே நாம் வஹீ அறிவித்தோம்.(அன்பியா: 26)

பிறகு, இறை வணக்கத்திற்கான எந்த வழிமுறைகளைப் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தானோ, மேலும், எவ்வாறு அன்னார் (ஸல்) தவ்ஹீதின் தரத்திற்கான உரிமையை நிறைவேற்றியவாறு இபாதத் செய்தார்களோ, அதில் நூற்றில் ஒரு பங்கு கூட, பிற மார்க்கங்களில் எவரிடமும் தென்படுவதில்லை.

அடுத்து, அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

قُلْ اِنِّيْٓ اُمِرْتُ اَنْ اَعْبُدَ اللّٰهَ مُخْلِصًا لَّهُ الدِّيْنَ

பொருள்: நீர் கூறுவீராக: மார்க்கத்தை (அதாவது, கட்டுப்படுவதை) முற்றிலும் அவனுக்கே ஆக்கியவாறு அல்லாஹ்வை வணங்க வேண்டுமென்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்.(அஸ்ஸுமர்: 12)

எனவே, ஓர் உண்மையான முஸ்லிமும் இதை ஓதும்போது அவரும் இவ்வாறு அறிவிப்பு செய்வார். அதாவது நான் கலப்பற்றவனாகி அல்லாஹ்வை

வணங்க வேண்டும்; கலப்பற்ற தவ்ஹீதை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்; மேலும், பெருமானார் (ஸல்) அவர்கள், திருக்குர்ஆனில் கட்டளையிடப்பட்டுள்ள அந்த அறிவிப்பை செய்து நிலைநாட்டி(க் காட்டி)ய, அந்த முன்மாதிரியின்படி நான் நடக்க வேண்டும்.

நாம் கலப்பற்ற தவ்ஹீதை நிலைநாட்டி நம்முடைய இறை வணக்கங்களுக்கான தரத்தை நிலைநாட்டுவோமாயின், ஒரு புரட்சியைக் கொண்டு வரக்கூடியவர்களாக நாம் ஆக முடியும். இல்லையென்றால், பேச்சுக்கள் மட்டுமே ஆகும். அப்பொழுதுதான் நாம் உண்மையான தவ்ஹீத் வாதிகள் என்று அழைக்கப்படவும் முடியும். அடுத்து, அல்லாஹ் கூறுகிறான்:

. وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْئًا

பொருள்: மேலும், நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். (அந்நிஸா: 37)

பிறிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَاِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ

பொருள்: மேலும், வணக்கத்திற்குரிய உங்கள் இறைவன் ஒரே இறைவன் ஆவான். அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அவனையன்றி வேறெந்த வணக்கத்திற்குரியவரும் இல்லை. (அல் பக்கரா: 164)

அடுத்து, திருக்குர்ஆனின் இறுதியில், அல்லாஹ் தனது தவ்ஹீதின் நிலைநாட்டல் குறித்து இவ்வாறு அறிவிப்பு செய்கிறான்:

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ. اَللّٰهُ الصَّمَدُ. لَمْ يَلِدْ
وَلَمْ يُوْلَدْ. وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

நீர் கூறுவீராக! அல்லாஹ் ஒருவனே ஆவான். அல்லாஹ் தேவையற்றவன். அவன் எவரையும் பெறவுமில்லை. அவன் பெறப்படவுமில்லை. அவனுக்கு ஒருபோதும் எவரும் இணையும் இல்லை.(அல் இக்லாஸ்: 2 - 5)

அல்லாஹ் இங்கு எல்லாவிதமான ஷிர்க்கையும் மறுத்து அறிவித்துள்ளான். மேலும், நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம், இதை உலகில் அறிவித்து விடுவீராக! என்று கூறினான். எனவே, அன்னாரை ஏற்றுக் கொள்பவர்களான நாமும் இதை ஓதும்போது, இந்த சூராவில் அறிவிக்கப்பட்டுள்ள, இன்னும் பல வேறு இடங்களிலும் அறிவிக்கப்பட்டுள்ள அந்த தூய ஏகத்துவத்தை அறிவிப்பது நமது கடமையாகும்.

அல்லாஹ் ஒருவனே ஆவான்; அல்லாஹ் (எந்தத்) தேவையும் அற்றவன். மாறாக, எல்லாவற்றிற்கும் அவன் தேவையானவன். அவன் எவருக்கும் தந்தையும் இல்லை; மகனும் இல்லை. அவனைப் போன்று எவரும் இருக்கவே முடியாது என்பதை நம்முடைய சொல்லாலும், செயலாலும் உலகிற்கு பறைசாற்ற வேண்டும் .

இது எத்தகைய ஓர் அறிவிப்பு என்றால், அது எல்லா மதத்தின் சீர்குலைந்த போதனைகளையும் மறுக்கின்றது. இந்தப் போதனையை அறிவித்தே மனிதனுக்கு அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்க முடியும். அதற்கான எல்லாரையும் விட உயரிய, மேலான முன்மாதிரி நம் தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னாரது வாழ்வின் ஒவ்வொரு நொடிப் பொழுதும் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காகக் கழிந்தது. இன்னும் சொல்வதாயின், நான் கூறியது போன்று, குழந்தைப் பருவத்திலிருந்தே அன்னாருக்கு அல்லாஹ் தவ்ஹீதுக்கான, கலப்பற்ற தவ்ஹீதுக்கான தார்பிய்யத் வழங்கியுள்ளான். இவை திருக்குர்ஆனிலிருந்து நான் கொடுத்த சில எடுத்துக்காட்டுகள் ஆகும். திருக்குர்ஆனோ இந்தத் தூதுச் செய்தியால் நிறைந்து கிடக்கிறது.

மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுகிறேன். அதிலிருந்து குழந்தை பருவம் முதல் நபித்துவ வாதம் புரியும் வரை, மேலும், அன்னாரது வாழ்வில் தவ்ஹீதுக்காக அன்னாருக்கு இருந்த துடிப்பு மற்றும் அதற்காக அன்னார் (ஸல்) மேற்கொண்ட முயற்சி பற்றி குறிப்பு கிடைக்கிறது. நபி பெருமானார் (ஸல்) அவர்களின் இயல்பு எவ்வளவு தூய்மையானதாக இருந்தது என்றால், தவ்ஹீத் மீதான நேசம் அன்னாரின் நாடி நரம்புகளில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், நபித்துவ பதவியில் அமர்வதற்கு முன்னதாகவே அன்னாரது இயல்பு இணைவைத்தல் மற்றும் சிலைகளை வணங்குதல் ஆகியவற்றை முற்றிலும் வெறுக்கக்கூடியதாக இருந்தது.

இதன்படி, ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் உம்மு அய்மன் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவித்து வந்தார்கள்: பவானா என்ற ஓர் சிலை இருந்தது. குறைஷியர்கள் அதற்குப் பெரிதும் கண்ணியம் அளித்து வந்தார்கள். அதனிடம் ஆஜராகி பலிகள் இடுவார்கள். ஆண்டில் ஒரு நாள் அங்கு இஃதிகாஃப் அமர்வார்கள். அபூ தாலிப் அவர்களும் தம் சமுதாயத்துடன் அங்கு செல்வார்கள். மாநபி (ஸல்) அவர்களையும் உடன் அழைத்துச் செல்ல விரும்பினார்கள். ஆனால், அன்னார்(ஸல்) மறுத்து விடுவார்கள். எதுவரை என்றால், ஒருமுறை ஹுஸூர் (ஸல்) அவர்களின் மாமிகளும் அபூதாலிப் அவர்களும் அன்னாரிடம் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்கள். மேலும், முஹம்மதே! நீர் என்ன விரும்புகிறீர்? நீர் உமது சமுதாயத்தின் பண்டிகையில் கலந்து கொண்டு அவர்களுடைய ஒன்றுகூடல் அதிகரிக்கச் செய்ய மாட்டீரா? என்று கேட்கத் துவங்கி விட்டார்கள்.

எவ்வாறாயினும், ஒருமுறை தம்முடைய மாமிமார்களுடைய வற்புறுத்தலால் அன்னார் (ஸல்) அங்கு சென்று விட்டார்கள்தான்; ஆயினும், கடுமையாக அச்சமடைந்து திரும்பி வந்தார்கள். மேலும், நான் அங்கு ஒரு விந்தையான காட்சியைக் கண்டேன் என்று கூறினார்கள். மாமிமார்கள், இவ்வளவு நல்ல மனிதர் மீது ஷைத்தான் பாதிப்பை ஏற்படுத்த முடியாதே! என்று கூறினார்கள். நீங்கள் என்ன பார்த்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், நான் சிலைக்கு அருகில் செல்லப் பார்க்கும்போது, ஒரு வெண்ணிற ஆடை அணிந்த நபர், முஹம்மதே! பின்னால் இருப்பீராக! இந்த சிலையைத் தொடாதிருப்பீராக! என்று கூறுவார் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இணைவைப்பாளர்களின் எந்தப் பண்டிகையிலும் கலந்து கொள்ளவில்லை. அல்லாஹ் அன்னாரை எப்பொழுதும் இத்தகைய ஷிர்க்கான சடங்குகளை விட்டும் பாதுகாத்து வைத்தான். இது நபித்துவ வாதத்துக்கு முன்னுள்ள நிகழ்வாகும்.

குழந்தைப் பருவத்தில் தம் சச்சா அபூ தாலிப் அவர்களுடன் சிரியா பயணத்தின் போது, கிறிஸ்தவ துறவி பஹீராவைச் சந்தித்தார்கள். அப்போது, மாநபி (ஸல்) அவர்கள் அவர் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது, லாத் மற்றும் உஸ்ஸா சிலைகளைப் பற்றி என்னிடம் கேட்காதீர். இறைவன் மீது ஆணையாக! அவற்றை விட அதிகம் எனக்கு வேறு எதன் மீதும் வெறுப்பு இல்லை என்று கூறினார்கள். (ஸவாயின் நபவிய்யா, தொகுதி 2, பக்கம் 35, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுடைய வாணிபப் பொருட்களை எடுத்துக் கொண்டு சிரியா நாட்டுக்குச் சென்றபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பொருட்களை விற்றார்கள். அதற்குப் பகரமாக மற்ற பொருட்களை வாங்கினார்கள். இதற்கிடையிலேயே, மாநபி (ஸல்) அவர்களுக்கும் ஒரு மனிதனுக்கும் இடையே ஏதோ ஒரு விஷயத்தில் வேறுபாடு ஏற்பட்டு விட்டது. அந்த மனிதன், லாத் மற்றும் உஸ்ஸா சிலை மீது ஆணையிட்டுச் சொல்வீராக! அதாவது, அப்போதுதான் நீர் சொல்வதை நான் நம்புவேன். இப்படி சத்தியம் செய்யுங்கள். சாட்சி பகருங்கள்! என்று சொன்னான்.

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், நான் ஒருபோதும் இந்த சிலைகள் மீது ஆணையிட்டதில்லை. நான் அவற்றைக் கடந்து சென்றால் கூட, முகத்தைத் திருப்பிக் கொள்கிறேன். நீர் என்னிடம் சத்தியம் செய்யச் சொல்கிறீரே! இது எப்படி முடியும்! என்று கூறினார்கள்.

(அத்தபகாத்துல் குப்ரா, பாகம் 1, பக்கம் 124, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இந்தத் தவ்ஹீதைப் பெறுவதற்காகவே அன்னார் (ஸல்) ஹிரா குகைக்கும் சென்று வந்தார்கள். முன்னரும் இதைப் பற்றி கூறப்பட்டு விட்டது. அங்கு அன்னாருக்கு ஓரிறைவனை வணங்குவதற்கும், தவ்ஹீதுக்கும் உள்ளத்தில் துடிப்பு இருக்கும்.

ஓரிடத்தில் அதை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இப்படி விவரித்துள்ளார்கள்:

ஹிரா குகை மக்காவின் மலைகளில் ஒரு புகழ்பெற்ற மலையான ஹிரா மலையில்

நபிமொழியிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசன் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இருக்கிறது. அது மக்காவில் இருந்து 3 மைல் தொலைவில் உள்ளது. தற்காலத்தில் அதை நூர் மலை என்று கூறுகிறார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சிலைகள் மீது வெறுப்போ இருக்கத்தான் செய்தது. மாநபி (ஸல்) அவர்கள் சிலைகளை வணங்குபவர்கள் மீதும், இணையற்ற ஓரிறைவனை விட்டு விலகுபவர்கள் மீதும் வருத்தம் கொண்டார்கள். தாம் (விலகியிருந்தது) மட்டுமின்றி, ஏன் சிலைகளை வணங்குகிறார்கள்? என்று மக்கள் மீதும் அன்னாருக்கு வருத்தம் இருந்தது. இறைவனால் நியமிக்கப்படுவதற்கு முன்பு மக்கள் குடியிருப்பை விட்டுத் தொலைவில் அந்தக் குகையில் இறை வணக்கம் செய்து வந்தார்கள். கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் 40 வயதை அடைந்தபோது, ஒருநாள் ஜிப்ரீல் தோன்றினார்கள். அப்பொழுது மாநபி (ஸல்) அவர்கள் மீது முதன் முதலாக வஹீ இறங்கியது. அதன் மூலம் அல்லாஹ் அன்னாரை நியமித்தான். அந்த முதல் வஹீ இறங்கியதுமே, பெருமானார் (ஸல்) அவர்கள் படைத்தவனின் ஓரிறைமையின் பக்கம் மக்களை அழைக்கத் துவங்கினார்கள். இணைவைப்புக்கு எதிராகப் போதிக்கத் துவங்கினார்கள். ஆனால், முற்றிலும் துவக்கத்தில் அன்னார் (ஸல்) தாம் மேற்கொண்ட பணியை பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை. மாறாக, மிகவும் மௌனமாக நடவடிக்கை மேற்கொள்ளத் துவங்கினார்கள். தம்மைச் சந்திக்கக்கூடியவர்களின் வட்டத்திற்குள் தமது போதனையை வரையறுத்து வைத்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 117-120)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நம்முடைய நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதற்காக ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) தொலைந்து போயிருந்த உண்மையை மீண்டும் உலகிற்குக் கொண்டு வந்தார்கள். இந்தப் பெருமிதத்தில் நம்முடைய நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எவரும் இணையில்லை. அன்னார் (ஸல்) முழு உலகையும் ஓர் இருளில் காணப் பெற்றார்கள்.

அடுத்து, அன்னார் (ஸல்) தோன்றியதனால் அந்த இருள் ஒளியாக மாறி விட்டது. எந்த சமுதாயத்தில் அன்னார் (ஸல்) தோன்றினார்களோ அந்த முழு சமுதாயமும் இணைவைத்தல் எனும் ஆடையை அவிழ்த்து விட்டு தவ்ஹீது எனும் ஆடையை அணிந்து கொள்ளாத வரை அன்னார் (ஸல்) இறக்கவில்லை. இந்த அளவு மட்டுமல்ல, மாறாக, அந்த மக்கள் ஈமானின் உயர்த்தரத்தை அடைந்து விட்டார்கள். மேலும், உண்மை, நன்றியுணர்வு மற்றும் உறுதியான நம்பிக்கையின் எந்த செயல்கள் அவர்களிடம் வெளிப்பட்டனவோ அவற்றிற்கான எடுத்துக்காட்டு உலகின் எந்தப் பகுதியிலும் காணப்படுவதில்லை.

இந்த வெற்றி, இந்த அளவு வெற்றி, மாநபி (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபிக்கும் இந்த வெற்றி கிடைக்கவில்லை. இது ஒன்றே மாநபி (ஸல்) அவர்களின் நபித்துவத்துக்கு ஒரு பெரும் சான்றாகும். அன்னார் (ஸல்) எத்தகைய ஒரு காலத்தில் தோன்றினார்கள் என்றால், வருகை வந்தார்கள் என்றால், அப்பொழுது காலம் மிகவும் அதிகமான இருளில் மூழ்கியிருந்தது. மேலும், இயல்பாகவே ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியை நாடிக் கொண்டிருந்தது. பிறகு, அன்னார் (ஸல்) எத்தகைய நேரத்தில் உலகை விட்டு மறைந்தார்கள் என்றால், அப்பொழுது லட்சக்கணக்கான மனிதர்கள் ஷிர்க் மற்றும் சிலை வணக்கத்தை விட்டுவிட்டு ஓரிறைக் கொள்கை மற்றும் நேர்வழியை மேற்கொண்டு விட்டிருந்தார்கள். உண்மையில், இந்த முழுமையான சீர்திருத்தம் அன்னாருக்கே உரித்தானதாக இருந்தது. அன்னார் (ஸல்) காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்த ஒரு சமுதாயத்துக்கு, விலங்குகளின் குணங்களைக் கொண்டிருந்தவர்களுக்கு மனித பழக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். அல்லது வேறு சொற்களில் இப்படிச் சொல்லலாம், விலங்குகளை மனிதர்களாக ஆக்கினார்கள், மிருகங்களை மனிதர்களாக ஆக்கினார்கள். பிறகு, மனிதர்கள் என்பதிலிருந்து கல்வி பயின்ற மனிதர்களாக ஆக்கினார்கள். பிறகு, கல்வி பயின்ற மனிதர்கள் என்பதிலிருந்து இறைமக்களாக ஆக்கினார்கள். ஆன்மிகத்தின் தன்மையை அவர்களிடம் ஊதி விட்டார்கள். உண்மையான இறைவனுடன் அவர்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தி விட்டார்கள். அவர்கள் இறைவழியில் ஆடுகளைப் போன்று அறுக்கப்பட்டார்கள். எறும்புகளைப் போன்று கால்களில் நசுக்கப்பட்டார்கள். ஆனால், ஈமானை கை நழுவவிடவில்லை. மாறாக, ஒவ்வோர் இன்னலிலும் முன்னால் அடியெடுத்து வைத்தார்கள்.

திருக்குர்ஆனிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

**A. Nasir Ahmad**
**(District Ameer, Melapalayam**

எனவே, ஐயமின்றி, நம்முடைய நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதன் அடிப்படையில் இரண்டாம் ஆதமாக இருந்தார்கள். அன்னார்தான் உண்மையான ஆதம் ஆவார்கள் என்றே சொல்ல வேண்டும். அன்னார் (ஸல்) மூலமாக, அன்னாரால் அனைத்து மனிதச் சிறப்புகள் உச்சத்தை எட்டின. அனைத்து நல்ல ஆற்றல்கள் தத்தமது பணியில் மூழ்கி விட்டன. மனித இயல்பின் எந்தக் கிளையும் பயன்தராமல் இருக்கவில்லை. அன்னார் (ஸல்) காலத்தால் பிந்தியிருந்தார்கள் என்பதனால் மட்டும் அன்னார் (ஸல்) மீது நபித்துவ முத்திரை இருக்கவில்லை. மாறாக, நபித்துவத்தின் அனைத்து சிறப்புகளும் அன்னார் (ஸல்) மீது நிறைவடைந்து விட்டன என்பதனாலும் இருக்கிறது.

(ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, லெக்சர் ஸியால்கோட், பக்கம் 206 - 207)

அடுத்து, ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

இறைவா! உனக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்! எங்களுக்கு உன்னை அடையாளம் கண்டு கொள்வதற்கு நீயே வழியைக் கூறினாய். உன்னுடைய தூய மறைகளை இறக்கி சிந்தனை மற்றும் அறிவின் தவறுகள் மற்றும் பிழைகளிலிருந்தும் காப்பாற்றினாய். தூதர்களின் தலைவர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும், தோழர்கள் மீதும் ஸலவாத்தும், ஸலாமும் உண்டாவதாக! அன்னார் (ஸல்) மூலமாக இறைவன் தொலைந்து போன ஓர் உலகை நேர்வழியில் நடத்தினான். அந்த முரப்பி (தர்பிய்யத் வழங்குபவர்), பயன் சேர்ப்பவர் வழிதவறிப் போன படைப்பினங்களை மீண்டும் நேரான பாதையில் கொண்டு வந்தார். அந்தப் பெருங் கருணையாளர், நன்மையின் உருவம் மக்களை ஷிர்க் மற்றும் சிலைகள் எனும் இன்னலில் இருந்து விடுவித்தார். அந்த ஒளியானவர் மற்றும் ஒளியைப் பரப்புபவர் தவ்ஹீதின் ஒளியை உலகில் பரப்பினார். அந்த மருத்துவர், காலத்தின் அந்த வைத்தியர் மற்றும் மருத்துவர் சீர்கெட்டுப்போன உள்ளங்களை உண்மையில் பாதம் நிலைபெறச் செய்தார். அந்த இரக்கமுள்ளவர், மற்றும் அற்புதங்களின் அடையாளம் இறந்தவர்களுக்கு வாழ்வுக்கான நீரை பருகக் கொடுத்தார். அந்தக் கருணையாளர், பரிவானவர் உம்மத்திற்காக வேதனையைத் தாங்கினார். மேலும், வலியைத் தாங்கினார். அந்த வீரர், பலசாலி நம்மை மரணத்தின் வாயிலிருந்து வெளியே கொண்டு வந்தார். அந்தப் பொறுமையாளர், தூய தன்னலமற்ற மனிதர் அடியார் என்பதில் தலையைக் குனிந்தார். தம்மை மண்ணோடு மண்ணாக்கிக் கொண்டார். அந்த முழுமையான தவ்ஹீத்வாதி, இறைஞானத்தின் கடல் இறைவனின் மகிமையை மட்டுமே விரும்பினார். (அல்லாஹ் அல்லாத) மற்றவற்றைத் தம் பார்வையிருந்து அகற்றினார். ரஹ்மானின் அந்த வல்லமையின் அற்புதமானது இவ்வாறு அமைந்தது. அதாவது, அன்னார் (ஸல்) எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்து இறைஞானக் கல்வியில் எல்லார் மீதும் மேலோங்கினார்; மேலும் ஒவ்வொரு சமுதாயத்தையும் தவறுகள் மற்றும் பிழைகளுக்குக் குற்றவாளியாக அறிவித்தார்.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 1, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 17)

அடுத்து, அன்னார் (ஸல்) ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

இன்று உலக வரலாற்றில் தவ்ஹீத் எனப்படுவது மாநபி (ஸல்) அவர்களின் உம்மத்தைத் தவிர வேறு எந்தப் பிரிவிடமும் காணப்படுவதில்லை. கோடிக்கணக்கான படைப்பினங்களை இறைவனின்

தவ்ஹீதில் நிலைநாட்டக்கூடிய, உன்னதமான கண்ணியம் அளித்து அந்த உண்மை இறைவன் பக்கம் வழிநடத்தக் கூடியதாக திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த மறையின் தடையமும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு சமுதாயமும் தத்தமது செயற்கை கடவுளை உருவாக்கிக் கொண்டது. தொன்று தொட்டு இருப்பவனே முஸ்லிம்களின் இறைவன் ஆவான். அவன் அழியாதவன், மாறாதவன் மற்றும் தொன்று தொட்டு இருக்கும் தன்னுடைய பண்புகளில் முன்பு இருந்தது போன்றே இப்பொழுதும் இருக்கின்றான். (பராஹீனே அஹ்மதிய்யா -ரூஹானீ கஸாயீன், பாகம் 1, பக்கம் 117 - 118)

ஆனால், அந்தோ! இன்று முஹம்மதிய்ய உம்மத்தும் (அதற்குக் கிடைத்த) இந்த தவ்ஹீதின் கண்ணியத்தை மறந்து கொண்டே செல்கிறது. அல்லாஹ் போதித்த அந்த உண்மையான தவ்ஹீத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு வேதனையுடன் வழிகாட்டிய, வலியுறுத்திய அந்த உண்மையான தவ்ஹீத் அவர்களிடம் இல்லை. கலப்பற்ற தவ்ஹீதை மறந்ததன் காரணமாக, அல்லாஹ்வின் பண்புகள் மீதும், ஒரு முஸ்லிமின் தனிச்சிறப்பாக இருக்க வேண்டிய அந்தக் கலப்பற்ற ஈமான் இருக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் அவர்களை ஏற்றுக் கொள்பவர்களின் பணி என்னவென்றால், தவ்ஹீதின் உண்மைத்தன்மையைப் புரிய வேண்டும். அதற்காகத் தமக்குள் சிறப்பான மாற்றங்களை உருவாக்க வேண்டும். இந்த ரமலான் மாதம் இபாதத்துகளுக்கான குறிப்பான மாதம் ஆகும். இதில் குறிப்பாக இதற்காக முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும். அதாவது, நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய முழு வாழ்விலும் எவ்வாறு தவ்ஹீதை நிலைநாட்ட முயற்சி செய்தார்களோ, நாமும் அன்னாரை நேசிப்பதாக வாதம் புரிகிறோம் என்றால், நாம் அதற்காக சிறப்பாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கட்டளையால் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக எவ்வாறு அன்னார் முயற்சி செய்தார்கள்! அதற்காக சிரமங்களை மேற்கொண்டார்கள்.

இதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்:

திருக்குர்ஆனில் அல்லாஹ் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களிடம் கூறுகிறான்:

اَنْذِرْ عَشِيْرَتَكَ الْاَقْرَبِيْنَ

பொருள்: அல்லாஹ்வின் தூதர் முஹம்மதே! (ஸல்) நீர் உலகின் மூலை முடுக்கில் உள்ள மக்களை எச்சரிப்பீராக! ஆனால், முதலில் உம் நெருங்கிய உறவினர்களை எச்சரிப்பீராக! ஏனெனில், அவர்களுக்கு உம் மீது இரட்டிப்பு உரிமை இருக்கிறது. ஒன்று, மற்ற உலகைப் போன்று இவர்களும் அழிகிறார்கள் என்பதாகும். மற்றொன்று, இவர்கள் உம் உறவினர்கள் ஆவார்கள். இவர்களுடைய மூதாதையர்கள் ஒரு காலத்தில் உம்முடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள் என்பதாகும். ஆங்கிலத்திலும் இப்படி ஒரு பிரசித்தி பெற்ற பழமொழி உள்ளது: Charity begins at home. அதாவது, தானமும் தர்மமும் முதலில் வீட்டில் இருந்து துவங்குகிறது. இவ்வாறே அறிவுரை பற்றி போதனை வழங்கும் முறை எப்பொழுதும் வீட்டிலிருந்தே துவங்க வேண்டும். இதன்படி, முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தக் கட்டளையை எப்படி செயல்படுத்தினார்கள் என்றால், அன்னார் (ஸல்) மக்காவின் வழக்கப்படி, ஸஃபா மலை மீது ஏறி நின்று கொண்டார்கள். மேலும், பல்வேறு கோத்திரங்களை ஒவ்வொன்றாகப் பெயரை எடுத்து அழைக்கத் துவங்கினார்கள். முதலில் அன்னார் (ஸல்) காலிப் குடும்பத்தினரை அழைத்தார்கள். அவர்கள் மஸ்ஜித் ஹராமில் இருந்து வெளியே வந்து ஸஃபா மலையின் அடிவாரத்திற்கு வந்து விட்டார்கள். அப்பொழுது அபூ லஹப் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், காலிப் குடும்பத்தினரோ வந்து விட்டார்கள். நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ சொல்லுங்கள் என்றான். ஆனால், அன்னார் (ஸல்) அபூலஹபின் பேச்சின் பக்கம் எந்த கவனமும் செலுத்தவில்லை. மேலும், லூயீ கோத்திரத்தின் மக்களை அன்னார் அழைத்தார்கள். அவர்கள் வந்து சேர்ந்ததும், மீண்டும் அபூ லஹப், இப்பொழுது லூயீ கோத்திரமும் வந்து விட்டது. நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று இப்பொழுதாவது கூறுங்கள் என்றான். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிறகும் கூட கவனத்திற் கொள்ளத்தக்கதாகக் கருதவில்லை. மேலும், மர்ரஹ் குடும்பத்தை அழைத்தார்கள். இவ்வாறு அவர்களும் வந்து விட்டார்கள். பிறகு, அன்னார் (ஸல்) கிலாப் கோத்திரம் மற்றும் குஸை ஆகிய கோத்திரங்களை அழைத்தார்கள். எதுவரை என்றால், எல்லா மக்களும் ஒன்று கூடி விட்டார்கள். எவர்களால் தாமே வர முடியவில்லையோ அவர்கள், இன்று எதற்காகத் தாங்கள் ஒன்று கூட்டப்பட்டுள்ளார்கள் என்று அறிந்து வந்து தமக்குத் தகவல் கொடுப்பதற்காகத் தம் தூதுவர்களை அனுப்பி விட்டார்கள். குறைஷியர்கள் உட்பட மக்காவின் அனைத்துக் கோத்திரங்களும் ஒன்று கூடியதும், கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுடன் உரையாடத் துவங்கினார்கள். அன்னார் (ஸல்) பாருங்கள்! இந்த மலைக்குப் பின்னால் ஒரு மிகப் பெரிய படை ஒன்று கூடியிருக்கிறது; அது உங்கள் மீது தாக்குதல் தொடுக்க நினைக்கிறது என்று நான் உங்களிடம் சொன்னால், நீங்கள் நான் கூறும் இந்த விஷயத்தை நம்புவீர்களா, மாட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஏன் இல்லை! உங்கள் பேச்சை நாங்கள் கண்டிப்பாக நம்புவோம். ஏனென்றால், நாங்கள் எப்பொழுதும் உங்களை நேர்மையாளராகக் கண்டிருக்கிறோம்; உண்மையாளராகக் கண்டிருக்கிறோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தக் கேள்வி உண்மையில், சாத்தியமற்ற ஒன்றை சாத்தியமானதாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்பது போன்றுதான் என்பது, மக்கத்து நிலைமையை பற்றி அறிந்த மக்களுக்குத் தெரியும். ஏனென்றால், மக்கத்தினரின் கால்நடைகள் தாழ்வுப் பகுதியில் மேய்ந்து வந்தன. அதில் எந்தவொரு படையும் ஒளிந்திருப்பது சாத்தியமற்ற அத்தகைய ஒரு பகுதிதான் அது. ஆனால், மாநபி (ஸல்) அவர்களின் உண்மைக்கான தாக்கம் அந்த மக்கள் மீது எந்த அளவு இருந்தது என்றால், அவர்கள், எங்கள் கண்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், நாங்கள் உங்கள் கூற்றைக் கண்டிப்பாக ஏற்போம். ஏனெனில், தங்களது உண்மைத்தன்மை எங்கள் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும் என்று கூறினார்கள். அவர்கள் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஒரே குரலாக தங்களது இந்த நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தியதும், மாநபி (ஸல்) அவர்கள், கேட்டுக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு ஒரு முக்கியச் செய்தியைக் கூறுகிறேன். அந்த செய்தியாவது, நான் அல்லாஹ்வின் புறமிருந்து தூதராக நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளேன் என்பதாகும். எனவே, நான் உங்களுக்குக் கூறுகிறேன், நீங்கள் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருக்க விரும்பினால், என்னைப் பின்பற்றுங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) இவ்வாறு கூறியதுதான் தாமதம், உடனே அபூ லஹப் உத்வேகம் பொங்க, تَبًّا لَكَ سَائِرَ الْاَيَّامِ اَلِهٰذَا جَمَعْتَنَا என்று கூறலானான்.

பொருள்:( நவூதுபில்லாஹ்!)உம் மீது அழிவு உண்டாகட்டும்! இவ்வளவு சிறிய விஷயத்திற்காகவா நீர் எங்களை ஒன்று திரட்டினீர்?.

இவ்வாறே மற்ற மக்களும் கேலி கிண்டல் செய்தவாறு, ஏளனம் செய்தவாறு கலைந்து போய் விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 9, பக்கம் 582-583, 2023 -ம் ஆண்டு பதிப்பு)

ஆனால், இந்த ஏளனம் மற்றும் எதிர்ப்பு அன்னாரைத் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்வதிலிருந்து தடுக்கவில்லை. அன்னார் தொடர்ந்து இந்த முயற்சியிலேயே ஈடுபட்டிருந்தார்கள். நான் கூறியது போன்று, ஏளனம் செய்யப்பட்டது; எதிர்ப்பும் அதிகரித்து விட்டது. அன்னாருக்கு இருந்த எதிர்ப்பின் வரலாற்றை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் வரலாற்று நூல்களின் அடிப்படையில் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்:

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவு மாபெரும் லட்சியத்தைக் கொண்டு வந்திருந்தார்களோ அந்த அளவே



கடுமையாக அன்னார் (ஸல்) எதிர்க்கப்பட்டிருக்க வேண்டியிருந்தது. ஏனென்றால், இருள் சூழ்ந்திருந்த ஒரு காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். ஒளியின் வருகையால் இருளின் படைகள் தமது முழு ஆற்றலுடன் அதை எதிர்ப்பது இன்றியமையாததாக இருந்தது. ஆக, இவ்வாறே நடந்தது. முந்தைய அனைத்து நபிமார்களோடு ஒப்பிடுகையில் அன்னாருக்கு எல்லாரையும் விட அதிகமான எதிர்ப்பு இருந்தது. அந்த எதிர்ப்பின் வெளிப்படையான காரணிகளில் இதுவும் ஒன்றாகும்: குறைஷி குலம் மிகத் தீவிரமான சிலைவணங்கி சமுதாயமாக இருந்தது. சிலைகளின் கண்ணியம் மற்றும் அன்பு அவர்களுடைய உள்ளங்களில் எந்த அளவுக்கு உறைந்து போயிருந்தது என்றால், அவர்களால் அவற்றுக்கு எதிராக ஒரு சொல்லைக்கூடக் கேட்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. அல்லாஹ்வை வணங்குவதற்காக மட்டுமே கட்டப்பட்ட கஅபா ஆலயத்திலும் அந்த அநீதியாளர்கள் நூற்றுக்கணக்கான சிலைகளை ஒன்று சேர்த்து வைத்திருந்தார்கள். தம்முடைய அனைத்துத் தேவைகளுக்காகவும் அந்த சிலைகளின் முகங்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது இஸ்லாம் வந்ததும், அதன் அடிப்படை கோட்பாடே படைத்த வல்லோனின் ஏகத்துவமாக இருந்தது. மேலும், எந்த ஒரு மனிதன், மரம், கல் அல்லது விண்மீன்கள் முதலியவற்றுக்கு முன்னால் தலை குனியாதீர்கள்; மாறாக

وَاسْجُدُوا لِلّٰهِ الَّذِي خَلَقَهُنَّ

என்ற தெளிவான கட்டளை இருந்தது.

பொருள்: இந்தப் பொருள்களைப் படைத்தவனான அவனுக்கு முன்னால் மட்டுமே குனிந்திடுங்கள்.

பிறகு, இது மட்டுமே அல்ல; இதற்கும் மேற்பட்டு, குறைஷியர்களின் சிலைகளை, அவர்களுடைய சிந்தனையில், இழிவுபடுத்தக்கூடிய சொற்களில் நினைவுகூரப்பட்டு வந்தது. மேலும், அவை நரகத்தின் விறகுகளாகக் கூறப்பட்டன. இந்த விஷயங்கள் குறைஷியர்களின் உடல் முழுவதும் கோபத்தீயை மூட்டி விட்டன. அவர்கள் ஒரே உயிராக ஒன்றிணைந்து இஸ்லாத்தை அழிப்பதற்காக எழுந்து நின்றார்கள். (ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 132 - 133)

இன்னமும் பல காரணங்கள் இருந்தனதான். ஆனால், எவ்வாறாயினும், இது பெரிய காரணமாக இருந்தது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு நபி அல்லது ரஸூல் இறைவன் புறமிருந்து தோன்றுகிறார். அவருடைய பிரிவு மக்களுக்கு ஒரு திறமை பெற்ற, நேர்மையான, துணிச்சல் மிக்க மற்றும் முன்னேற்றம் அடையக் கூடிய குழுவாகத் தென்படுகிறது. ஆகவே, அப்போது இருக்கின்ற சமுதாயங்கள் மற்றும் பிரிவுகளின் உள்ளங்களில், அவர் மீது கண்டிப்பாக ஒரு வகையான பகைமையும், பொறாமையும் உருவாகி விடுவதுண்டு. குறிப்பாக, ஒவ்வொரு மதத்தின் அறிஞர்கள் மற்றும் அரியணையில் வீற்றிருப்பவர்கள் ஆகியோரோ பெரும் பகைமையை வெளிப்படுத்துகிறார்கள். ஏனென்றால், இறைவனின் அந்த ஆண்மகன் தோன்றுவதனால், அவர்களுடைய வருமானம் மற்றும் அந்தஸ்து ஆகியவை பாதிக்கப்படுகின்றன. அவர்களுடைய மாணவர்கள் மற்றும் சீடர்கள் அவர்களுடைய வலையிருந்து வெளியேற ஆரம்பித்து விடுகிறார்கள். ஏனெனில், அனைத்து ஈமானிய, நல்லொழுக்க மற்றும் அறிவுச் சிறப்புகளையும் இறைவன் புறமிருந்து பிறக்கின்ற அந்த நபரிடம் காண்கிறார்கள். நல்லியல்பு கொண்ட, நற்பேறு கொண்ட சீடர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களை விட்டுவிட்டு, இறைவனின் ஆண்மகனின் பக்கம் வருகிறார்கள். எனவே, அறிவுச் சிறப்பு, இறையச்சம் மற்றும் தீமையில் இருந்து தவிர்ந்திருத்தல் ஆகியவற்றை கருதி, அந்த அறிஞர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததே அந்த கண்ணியம், அதற்கு இப்பொழுது அவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கவில்லை என்பதை அறிவுள்ளவர்களும், பிரித்து அறியக்கூடியவர்களும் புரியத் தொடங்கி விடுகிறார்கள். மேலும், நஜ்முல் உம்மஃ (சமுதாயத்தின் நட்சத்திரம்), ஷம்ஸல் உம்மஹ் (சமுதாயத்தின் சூரியன்), ஷைஃஹுல் மஷாயிஃஹ் (ஞானிகளின் தலைவர்) போன்று அவர்களுக்கு வழங்கப்பட்ட கண்ணியத்திற்குரிய பட்டங்கள் இப்பொழுது அவர்களுக்குப் பொருந்தக்கூடியவை அல்ல. ஆகையால், இந்தக் காரணங்களால் அறிவாளிகள் அவர்களை விட்டும் முகந்திருப்பி விடுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் தம்முடைய ஈமானை வீணடிக்க விரும்புவதில்லை. ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களின், நல்லியல்புள்ளவர்களின் செயலோ இதுவாகும். இயலாமையினால் இந்த இழப்புகளின் காரணமாக ஆலிம்கள் மற்றும் ஞானிகளின் பிரிவு எப்பொழுதும் நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்கள் மீது பொறாமை கொண்டு வந்திருக்கிறது. காரணம் என்னவென்றால், இறைவனின் நபிமார்கள் மற்றும் இறைவன் புறமிருந்து அனுப்பப்படுபவர்களின் காலத்தில் இந்த மக்களின் முகத்திரை கடுமையாகக் கிழிக்கப்படுகிறது. ஏனெனில், உண்மையில், அவர்கள் குறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். மிக மிகக் குறைவாகவே ஒளியைக் கொண்டிருக்கிறார்கள். இறைவனின் நபிமார்கள் மற்றும் உண்மையாளர்களுடனான அவர்களுடைய பகைமை வெறும் மனயிச்சையினால் இருக்கிறது. முற்றிலும் மனயிச்சைக்குக் கட்டுப்பட்டு, துன்பம் ஏற்படுத்துவதற்கான திட்டம் தீட்டுகிறார்கள். இன்னும் கூறுவதாயின், சிலவேளை அவர்கள், நாம் இறைவனின் ஒரு தூய உள்ளம் கொண்ட அடியாருக்கு அநியாயமாக துன்பமிழைத்து இறைவனின் கோபத்திற்குக் கீழ் வந்து விட்டோமே என்பதைத் தம் உள்ளங்களில் உணரவும் செய்கிறார்கள். எதிர்ப்பதற்கான சூழ்ச்சிக்காக எல்லா நேரமும் அவர்களிடமிருந்து வெளிப்படுகின்ற அவர்களுடைய செயல்களும்கூட அவர்களுடைய மனதின் குற்ற உணர்வு நிலையை அவர்கள் மீது வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. ஆனால், இருந்தாலும்கூட, பொறாமைத் தீயால் இயங்கும் அதிவேக எந்திரம் பகைமையின் குழிகளின் பக்கம் அவர்களை இழுத்துச் செல்கிறது. இந்தக் காரணங்கள்தான் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் இணைவைப்பாளர்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் அறிஞர்களை உண்மையை ஏற்பதை விட்டும் இழப்பிற்குரியவர்களாக வைத்திருந்தன. அது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, கடுமையான பகைமைக்கு இணங்க வைத்து விட்டன. எனவே, அவர்கள் எப்படியாவது இஸ்லாத்தை உலகத்திலிருந்தே முற்றிலுமாக அழித்து விட வேண்டும் என்ற சிந்தனையிலேயே மூழ்கி விட்டார்கள். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் குறைவாகவே இருந்தார்கள் என்பதனால், அவர்களுடைய எதிரிகள் செல்வம், பொருள், ஆள்பலம், மரியாதை, தகுதி ஆகியவற்றில் மற்ற பிரிவைக்காட்டிலும் தம்மை மேலானவர்களாகக் கருதினார்கள். மேலும், இயல்பாகவே இத்தகைய பிரிவுகளின் மனதிலும், மூளையிலும் இடம்பெறுகின்ற அந்த ஆணவத்தின் காரணமாக, அப்போதைய முஸ்லிம்களுடன், அதாவது, ஸஹாபிகளுடன் கடுமையாகப் பகைமை பாராட்டினார்கள். இந்த விண்ணின் செடி மண்ணில் நிலைபெறுவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் அந்த உண்மையாளர்களை அழிப்பதற்காக, முழு மூச்சாக முயன்றார்கள். மேலும், துன்பமிழைப்பதில் எந்தக் குறையையும் விட்டு வைக்கவில்லை. எங்கே இந்த மார்க்கத்தின் பாதம் உறுதியாகிவிடுமோ! ;பிறகு, அதன் வளர்ச்சியானது நம் மதமும், சமுதாயமும் நாசமாவதற்குக் காரணமாகி விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது.

எனவே, ஒரு மதிப்பச்சத்தின் வடிவில் அவர்களுடைய உள்ளத்தில் அமர்ந்து விட்ட இந்த அச்சத்தினாலேயே, மிகவும் கொடூரமான மற்றும் அநீதியான செயற்பாடுகள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டன. அவர்கள் வேதனை மிகுந்த வழிமுறைகளில் பெரும்பாலான முஸ்லிம்களை அழித்தார்கள். ஒரு நீண்ட காலம், அதாவது, 13 ஆண்டு காலம் வரை அவர்கள் தரப்பிலிருந்து இதே நடவடிக்கை இருந்தது. சற்றும் இரக்கமில்லாமல் இறைவனின் நன்றியுணர்வுள்ள அடியார்கள் மற்றும் மனித இனம் பெருமிதம்

கொள்கின்ற அந்த மக்கள், அந்தத் தீய காட்டு விலங்குகளின் வாள்களால் துண்டு துண்டாக ஆக்கப்பட்டார்கள். அநாதைக் குழந்தைகளும், இயலாத, ஏழைப் பெண்களும் வீதிகளிலும் தெருக்களிலும் அறுக்கப்பட்டனர். இவ்வாறு செய்யப்பட்டும், வல்ல இறைவன் புறமிருந்து ஒருபோதும் தீமையை எதிர்த்து சண்டையிடாதீர்கள் என மிக உறுதியாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த உண்மையாளர்கள் இவ்வாறே செய்தார்கள். அவர்களுடைய ரத்தத்தால் வீதிகள் சிவந்து போயின. ஆனால், அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. மேலும், அவர்கள் குர்பான் விலங்குகள் போன்று அறுக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் ஒரு சிறு பெருமூச்சு கூட விடவில்லை.

(கவர்மென்ட் அங்ரேஸி அவர் ஜிஹாது, ரூஹானீ கஸாயீன், தொகுதி 17, பக்கம் 4 - 5)

மக்கத்து காஃபிர்கள் மாநபி (ஸல்) அவர்களைத் தவ்ஹீதின் தூதுச் செய்தியைப் பரப்புவதைக் கைவிடுமாறு எச்சரிக்கவும் செய்தார்கள். பேராசையும் காட்டினார்கள். ஆனால், தவ்ஹீதை உலகில் நிலைநாட்டுவதுதான் எனது வாழ்வின் நோக்கம் ஆகும்; எனவேதான் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான் என்பதே அன்னாருடைய பதிலாக இருந்தது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

எதிர்ப்பு வேகம் எடுத்தது. மறுபக்கம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், அன்னாருடைய ஸஹாபா பெருமக்களும் தொடர்ச்சியாக மக்கத்தினருக்கு இறைவனின் இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைக்கத் துவங்கினார்கள்: இந்த உலகைப் படைத்த இறைவன் ஒருவன் ஆவான்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை; எந்த அளவு நபிமார்கள் காலஞ் சென்றுள்ளார்களோ அவர்கள் அனைவரும் அவனுடைய ஓரிறைமையை உறுதிப்படுத்தினார்கள். தங்கள் சொந்த இனத்தவர்களையும் இதே போதனையின் பக்கம் அழைத்து வந்தார்கள். நீங்கள் ஓரிறைவன் மீது ஈமான் கொள்ளுங்கள். இந்தக் கற்சிலைகளை விட்டு விடுங்கள். ஏனெனில், இவை முற்றிலும் பயனற்றவை ஆகும். இவற்றிடம் எந்த ஆற்றலும் இல்லை. மக்கத்தினரே! நீங்கள் பார்ப்பதில்லையா? அவற்றுக்கு முன்னால் படைக்கப்படும் பொருட்களின் மீது ஈக்கள் கூட்டமாக வந்து அமர்ந்து கொண்டால், அவை அந்த ஈக்களை விரட்டுவதற்குக் கூட ஆற்றல் கொண்டிருப்பதில்லை. யாராவது அவற்றைத் தாக்கினால் அவற்றால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூட முடிவதில்லை. யாராவது அவற்றிடம் கேள்வி கேட்டால், அவற்றால் பதிலளிக்க முடிவதில்லை. யாராவது அவற்றிடம் உதவி கேட்டால், அவற்றால் அவர்களுக்கு உதவ முடிவதில்லை. ஆனால், ஓரிறைவனோ கேட்கக்கூடியவர்களின் தேவையை நிறைவேற்றுகிறான். கேள்வி கேட்பவர்களுக்கு பதில் அளிக்கிறான். உதவி கேட்பவர்களுக்கு உதவி செய்கிறான். தன் எதிரிகளைத் தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருகிறான். மேலும், இபாதத் செய்யும் தன் அடியார்களுக்கு உயர் முன்னேற்றங்களை வழங்குகிறான். அவனிடமிருந்து ஒளி வருகிறது. அது அவனை வணங்குபவர்களின் உள்ளங்களை ஒளிபெறச் செய்து விடுகிறது. பிறகு, ஏன் நீங்கள் இத்தகைய இறைவனை விட்டுவிட்டு உயிரற்ற சிலைகளுக்கு முன்னால் குனிந்து, உங்கள் வாழ்நாளை வீணடிக்கிறீர்கள்?

நீங்கள் பார்ப்பதில்லையா? இறைவனின் ஏகத்துவத்தை விட்டுவிட்டு உங்களுடைய சிந்தனைகளும் அசுத்தமாக இருக்கின்றன; உள்ளங்களும் இருளடைந்து விட்டன; நீங்கள் பல வகையான கற்பனையான போதனைகளில் மூழ்கியுள்ளீர்கள் உள்ளங்களில் கற்பனைகள் உருவாகின்றன. ஏன்? ஏகத்துவத்தை விட்டு விட்டதனால். உங்களிடம் ஹலால் மற்றும் ஹராமிற்கு இடையிலான வேறுபாடு இருக்கவில்லை. நல்லதையும் தீயதையும் உங்களால் பிரித்தறிய முடிவதில்லை. உங்களுடைய தாய்மார்களை கண்ணியக் குறைவாக நடத்துகின்றீர்கள். உங்களுடைய சகோதரிகள் மற்றும் மகள்கள் மீது அநீதியிழைக்கிறீர்கள். அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்குக் கொடுப்பதில்லை. உங்களுடைய மனைவிமார்களுடன் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. அநாதைகளின் உரிமைகளைப் பறிக்கிறீர்கள். விதவைகளைக் கொடுமைப்படுத்துகிறீர்கள். ஏழைகள் மற்றும் வலுவிழந்தவர்கள் மீது அநீதியிழைக்கிறீர்கள். மற்றவர்களின் உரிமையைப் பறித்து உங்களுடைய பெருமையை நிலைநாட்ட விரும்புகிறீர்கள். பொய் மற்றும் ஏமாற்று வேலைகளுக்காக நீங்கள் வெட்கப்படுவதில்லை. திருட்டு மற்றும் கொள்ளை மீது உங்களுக்கு வெறுப்பு இல்லை. சூதாட்டமும், மது அருந்துதலும் உங்களுடைய வழக்கமாகி விட்டது. அறிவைப் பெறுதல் மற்றும் சமுதாயத்துக்கு உதவி புரிவதன் பக்கம் உங்களுக்கு கவனம் இல்லை. எப்பொழுது வரை ஓரிறைவன் பக்கம் கவனம் செலுத்தாதவர்களாக இருப்பீர்கள்? வாருங்கள்! உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். மேலும், அநீதியை விட்டு விடுங்கள். இந்தத் தீமைகள் உங்களிடம் உருவாகி விட்டன. அவற்றை சீர்திருத்திக் கொள்ளுங்கள்.

இன்றும் இந்தத் தீமைகளை உடையவர்கள், தவ்ஹீதை விட்டு விலகியதனால் அவ்வாறு இருக்கிறார்கள். எந்த சமுதாயங்களில் இந்தத் தீமைகள் இருக்கின்றனோ, அவர்களிடம் ஓரிரு நன்மைகள் இருந்தாலுமே, நான் வாசித்த அந்தத் தீமைகளில் பல அவர்களிடம் காணப்படுகின்றன. அவர்கள் தவ்ஹீதை விட்டு விலகியிருப்பதுதான் இதற்குக் காரணம். சில முஸ்லிம்களின் நிலையும் இவ்வாறே இருப்பது பேறின்மையாகும். பிறகு, அன்னார் (அலை) கூறினார்கள்:

இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறை என்னவென்றால், உரிமையாளர் ஒவ்வொருவருக்கும் அவருக்கான உரிமையை வழங்கிடுங்கள். இது மிகவும் முக்கியமான விஷயம் ஆகும். இறைவன் செல்வத்தை வழங்கியிருக்கிறான் என்றால், நாடு, சமுதாயங்கள் ஆகியவற்றுக்குத் தொண்டு செய்வதற்காகவும், பலவீனமானவர்கள் மற்றும் ஏழைகளின் முன்னேற்றத்திற்காகவும் அதை செலவிடுங்கள். பெண்களுக்கு கண்ணியம் அளித்திடுங்கள். அவர்களுக்கான உரிமையை செலுத்திடுங்கள். அநாதைகளை அல்லாஹ்வின் அமானிதங்களாகக் கருதுங்கள். அவர்களைப் பராமரிப்பதை உயர்வகையான நன்மையாகக் கருதுங்கள். விதவைகளுக்கு ஆதரவாளர்கள் ஆகிடுங்கள். நன்மைகள் மற்றும் இறையச்சத்தை நிலைநாட்டுங்கள். நீதி, நேர்மை மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, கருணை புரிதல் மற்றும் பேருதவி செய்தலை உங்களுடைய அடையாளமாக ஆக்கிக் கொள்ளுங்கள். நீதி மட்டுமல்ல; அதற்கும் மேற்பட்டு, கருணையும் இருக்க வேண்டும். பேருதவியும் இருக்க வேண்டும். இது ஒரு நம்பிக்கை கொண்டவருக்கான போதனை ஆகும். நீங்கள் இந்த உலகில் வந்திருப்பது வீண் போகக்கூடாது. உங்களுக்குப் பின்னால் நல்ல தாக்கங்களை விட்டுச் செல்லுங்கள். அப்போதுதான் நிரந்தரமான நன்மைக்கான விதை விதைக்கப்படும். உரிமையைப் பெறுவதில் அல்ல; மாறாக, தியாகம் மற்றும் அர்ப்பணிப்பில் தான் உண்மையான கண்ணியம் உள்ளது. உரிமையைப் பெறுவதற்கு மட்டும் முயற்சி செய்யாதீர்கள். தியாகம் மற்றும் அர்ப்பணிப்பும் இன்றியமையாததாகும். எனவே, நீங்கள் தியாகம் செய்யுங்கள். இறைவனுக்கு அருகில் செல்லுங்கள். இறைவனின் அடியார்களுக்கு எதிரில் தியாகத்துக்கான முன்மாதிரியைக் காட்டுங்கள். அப்போதுதான் இறைவனிடம் உங்கள் உரிமை நிலைபெறும்.

இவை உண்மையான தவ்ஹீதில் நிலைபெறுவதற்கான அடையாளங்கள் ஆகும். நாம் பலவீனமானவர்கள்தான். ஆனால், நம்முடைய பலவீனத்தைப் பார்க்காதீர்கள்.

இதையும் அன்னார் (ஸல்) அறிவித்தார்கள். விண்ணில் உண்மையின் அரசாட்சிக்கான தீர்ப்பாகி விட்டது. இப்பொழுது ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாக நீதிக்கான தராசு வைக்கப்படும். நீதி மற்றும் கருணையின் அரசாட்சி நிலைநாட்டப்படும். அதில் எவர் மீதும் அநீதியிழைக்கப்பட மாட்டாது. மார்க்க விவகாரத்தில் தலையிடப்பட மாட்டாது. பெண்கள் மற்றும் அடிமைகள் மீது இழைக்கப்பட்டு வந்த அநீதிகள், நீக்கப்படும். மேலும், ஷைத்தானின் ஆட்சியின் இடத்தில், ஓரிறைவனின் ஆட்சி நிலைநாட்டப்படும். இந்தப்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

போதனைகள் மக்கத்தினருக்கு மீண்டும் மீண்டும் கூறப்பட்டபோது, ஒழுக்கமான இயல்புடையவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் ஏற்படத் துவங்கியது.

ஆகவே, ஒருநாள் மக்காவின் தலைவர்கள் ஒன்றுகூடி, ஹுஸூர் (ஸல்) அவர்களின் சச்சா அபூதாலிபிடம் வந்தார்கள். அவர்களிடம், நீங்கள் எங்களுடைய தலைவர் ஆவீர்கள். உங்களுக்காக நாங்கள் உங்கள் சகோதரர் மகன் முஹம்மத் (ஸல்) அவர்களை எதுவும் சொல்லவில்லை. இப்பொழுது உங்களுடன் நாங்கள் இறுதித் தீர்ப்பை மேற்கொள்ளும் தருணம் வந்து விட்டது. ஒன்று, நீங்கள் அவருக்குப் புரிய வையுங்கள். அவர் எங்களிடம் என்னதான் எதிர்பார்க்கிறார் என்று அவரிடம் கேளுங்கள். அவர் கண்ணியத்தைப் பெற ஆசைபடுகிறார் என்றால், நாங்கள் அவரை எங்களுடைய தலைவராக ஆக்கிக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம். அவர் பொருளுக்கு ஆசைப்படுகிறார் என்றால், எங்களில் ஒவ்வொருவரும் தனது செல்வத்தின் ஒரு பகுதியை அவருக்குக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறோம். அவருக்குத் திருமணத்திற்கான ஆசை இருக்கிறது என்றால், மக்காவின் எந்தப் பெண்ணை அவருக்குப் பிடித்திருக்கிறதோ அவள் பெயரை சொல்லட்டும். நாங்கள் அவளை அவருக்கு மணமுடித்து வைக்க ஆயத்தமாக இருக்கிறோம். நாங்கள் இதற்குப் பகரமாக அவரிடம் எதுவும் எதிர்பார்க்கவில்லை. எந்த விஷயத்தை விட்டும் நாங்கள் தடுக்கவில்லை. அவர் எங்களுடைய சிலைகளைப் பழிப்பதை விட்டு விட வேண்டும் என்பதை மட்டுமே நாங்கள் விரும்புகிறோம். அவர் இறைவன் ஒருவன் என்று சொல்லிக் கொள்ளட்டும். ஆனால், எங்களுடைய சிலைகள் தவறானவை என்று சொல்லக்கூடாது. அவர் இந்த அளவு விஷயத்தை ஏற்றுக் கொண்டாலே அவருடன் எங்களுக்கு சமரசம் ஆகி விடும். நீங்கள் அவருக்குப் புரிய வையுங்கள். எங்களுடைய பரிந்துரையை ஏற்றுக் கொள்ள இணங்க வையுங்கள். இல்லையென்றால், பிறகு, இரண்டு விஷயங்களில் ஒன்று நடக்கும்.



ஒன்று நீங்கள் உங்கள் சகோதரர் மகனை விட வேண்டியது வரும். இல்லையென்றால், உங்களுடைய சமுதாயம் உங்களுடைய தலைமையை மறுத்து விட்டு உங்களை விட்டு விடும் என்று கூறினார்கள்.

இந்த விஷயம் அபூதாலிப் அவர்களுக்கு மிகவும் மனவருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருந்தது. அரேபியர்களிடம் பணம், பொருளோ குறைவாகவே இருக்கும். அவர்களுடைய எல்லா மகிழ்ச்சியும், அவர்களுடைய தலைமைத்துவத்தில் இருந்து வந்தது. தலைவர்கள் சமுதாயதிற்காக உயிர் வாழ்ந்து வந்தார்கள். சமுதாயம் தலைவர்களுக்காக உயிர் வாழ்ந்து வந்தது. (எனவே,) விஷயத்தைக் கேட்டு அபூதாலிப் மனஉளைச்சலுக்கு ஆளானார்கள். அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வரவழைத்து அன்னாரிடம், என் சகோதரர் மகனே! என் சமுதாயத்தினர் என்னிடம் வந்து, இன்னின்ன செய்திகளை என்னிடம் தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் என்னிடம், உம் சகோதரர் மகன் இந்த விஷயங்களில் எந்தவொரு விஷயத்துக்கும் சம்மதிக்கவில்லை என்றால், பிறகு, எங்கள் புறமிருந்து எல்லாவிதமான பரிந்துரையும் முன்வைக்கப்பட்டு விட்டது. இதையெல்லாம் கொடுக்க ஆயத்தமாக உள்ளோம் என்று நாங்கள் கூறி விட்டோம். அவர் இதற்கும் தனது வழிமுறையிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை என்றால், நீங்கள் அவரை விட்டு விட வேண்டும். நீங்கள் அவரை விடத் தயாராக இல்லையென்றால், பிறகு, நாங்கள் உங்களுடைய தலைமை அதிகாரத்தை நிராகரித்து உங்களை விட்டு விடுவோம் எனக் கூறியுள்ளார்கள் என்று கூறினார்கள். அபூதாலிப் அவர்கள் இந்த விஷயத்தைக் கூறியதும், அவர்களுடைய, அதாவது, அபூதாலிப் அவர்களுடைய கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அவர்களுடைய கண்ணீரைப் பார்த்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்களிலும் கண்ணீர் வந்து விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள், என் சிறிய தந்தையாரே! நீங்கள் உங்களுடைய சமுதாயத்தை விட்டு விடுங்கள்; எனக்குத் துணை நில்லுங்கள் என்று நான் கூறவில்லை. நீங்கள் தாராளமாக எனக்குத் துணையாக இருப்பதை விட்டு விடுங்கள். உங்களுடைய சமுதாயத்துடன் இணைந்து கொள்ளுங்கள். ஆனால், இணையற்ற ஓரிறைவன் மீது ஆணையாக! எனது வலக்கையில் சூரியனையும், இடக்கையில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்தாலும்சரி, அப்பொழுதும் நான் இறைவனின் ஏகத்துவத்தைப் போதிப்பதிலிருந்து விலகியிருக்க முடியாது. இறைவன் எனக்கு மரணத்தைத் தரும் வரை நான் எனது பணியில் மூழ்கியிருப்பேன். உங்களுக்குப் பொருத்தமானதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மை நிறைந்த இந்த பதில் அபூதாலிப் அவர்களின் கண்களைத் திறக்கப் போதுமானதாக இருந்தது. அவர்கள், எனக்கு ஈமான் கொள்ள நல்வாய்ப்பு கிடைக்கவில்லைதான்; ஆயினும், இந்த ஈமானின் காட்சியைப் பார்ப்பதற்கு நல்வாய்ப்பு கிடைத்ததே எல்லா செல்வங்களையும் விடப் பெரிய செல்வம் ஆகும் எனப் புரிந்து கொண்டார்கள். அவர்கள், என் சகோதரர் மகனே! செல்வீராக! உமது கடமையை நிறைவேற்றிக் கொண்டே இருப்பீராக. சமுதாயம் என்னை விட விரும்பினால் தாராளமாக விடட்டும்; நான் உம்மை விட மாட்டேன் என்று கூறினார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 199 -202)

தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கத்து காஃபிர்கள் புறமிருந்து செய்யப்பட்ட அனைத்து விதமான அநீதியையும் வரம்புமீறல்களையும் பொறுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் எழுதியுள்ளது போன்று இந்த ஆன்மாவையே அன்னார் (ஸல்) தம் ஸஹாபிகளிடமும் உருவாக்கினார்கள். அவர்கள் தம்முடைய தலைகளை வெட்டி விட்டார்கள். அதன் விளைவு என்னவாக இருந்தது என்றால், அவர்கள் அஹது அஹது என்று அறிவித்தவாறு, அநீதியைப் பொறுத்துக் கொண்டார்கள். தம்முடைய உயிர்களை அர்ப்பணித்தார்கள்.

இப்பொழுது கூறப்பட்ட மக்கத்து காஃபிர்களின் அனைத்துத் தீமைகளும் அவர்கள் தவ்ஹீதை விட்டு விலகியிருந்ததன் காரணமாக இருந்தது; ஷிர்க்கின் காரணமாக இருந்தது. இன்றும் எந்த சமுதாயங்களிடம், எந்த மக்களிடம் இந்தத் தீமைகள் இருக்கின்றனவோ, அவர்கள் தவ்ஹீதை விட்டு விலகியிருப்பதன் காரணமாகவே இருக்கின்றன. எனவே, இத்தகைய நிலையில், நமது பணி என்னவெனில், நாம் தவ்ஹீதுக்கான அறிவிப்பை செய்து கொண்டே இருக்க வேண்டும். இந்தத் தவ்ஹீதுக்கான தூதுச் செய்தியை நாம் எட்ட வைக்கின்ற அதே வேளையில், நம்முடைய ஆன்மிக, நல்லொழுக்க நிலைமைகளிலும், ஒரு தெளிவான மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் உண்மையான தவ்ஹீதை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் என்றும், இறைவனின் கட்டளைப்படி நடக்கக்கூடியவர்கள் என்றும் அழைக்கப்பட முடியும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி அத்தாவுல் முஃக்னீ

**********

1-ம் பக்கத் தொடர்ச்சி...(தஃப்ஸீரே கபீர்)

நீங்கள் நாடு கடத்தப்படுவீர்கள். எதுவரை என்றால், உங்களைப் போன்ற சமுதாயம் தொடர்பான இரண்டாவது தண்டனைக்கான செய்தி இருக்கின்றது. அப்போது வந்து விடும்; அப்போது பல்வேறு நாடுகளிலிருந்து இறைவன் உங்களை ஒன்று கூட்டி மீண்டும் புனித பூமிக்கு கொண்டு வருவான்.

இந்த வசனத்திலிருந்து வெளிப்படுவது என்னவென்றால், பனீ இஸ்ரவேலர்களுக்கு எவ்வாறு இரண்டு அழிவுகள் பற்றிய செய்தி சூரா பனீ இஸ்ராயீலின் ஆரம்பத்தில் வழங்கப்பட்டதோ, அதே போன்ற செய்தி முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
(தஃப்ஸீரே கபீர்,தொகுதி 4. சூரா பனீ இஸ்ராயீல், வசனம் எண்: 105)

**********

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்த மனம் கவர் கோணத்தில் நற்குறிப்புகள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசல் 06 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**5** ஆண்டு **தப்லீஃக் மாதம் 06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி..**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆவின் நிலை என்னவாக இருந்தது?

இதைப் பற்றியும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது தஃப்ஸீரில் ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள். சில இடங்களில் நான் எனது சொந்த வார்த்தைகளிலும் கூறுவேன். எவ்வாறிருப்பினும், அதிலிருந்தே அவை எடுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஏராளமானோர் துஆ செய்கின்றனர், ஆனால், அவர்களின் கண்கள், அவர்களின் இதயம், அவர்களின் மூளை, அவர்களின் உள்ளம் துஆவை ஆமோதிப்பதில்லை. அவர்கள் துஆ செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் கண்கள் வேறு எங்கோ இருக்கின்றன; இதயம் வேறு எங்கோ இருக்கிறது; மூளை வேறு எங்கோ உலாவிக் கொண்டிருக்கிறது; உள்ளத்தில் இருக்க வேண்டிய அந்த அன்பு இருப்பதில்லை. இறைவன் மீது இருக்க வேண்டிய நேசம் இருப்பதில்லை. அதன் விளைவு இவ்வாறே வெளிப்படுகிறது. அதாவது, துஆவோடு இந்த விஷயங்கள் ஒன்றிணைந்து இருப்பதில்லை. மேலும், அவை துஆவை ஆதரிப்பதில்லை. எனவே அந்த துஆவோ பின்னர் ஒரு வெளிப்படையான துஆவாகவே இருக்கிறது. அவரது கண்கள் கண்ணீர் வடிப்பதில்லை. அவர்களின் இதயம் உருகுவதில்லை.

**துஆ செய்யும்போது கண்கள் ஈரமாக வேண்டும்; இதயம் உருக வேண்டும். மூளை முழுமையாக ஒருமுகப்பட்டு இறைவனை நோக்கி இருக்க வேண்டும்.**

அவர்களின் இதயம் உத்வேகத்துடன் துடிக்கவில்லையென்றால் அதன் விளைவு இவ்வாறு அமைகின்றது. அதாவது அவர்களின் துஆ என்பது காற்றில் தூசி பறந்து விடுவதைப் போன்று பறந்து விடுகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட சுதந்திரமானவர் மற்றும் தாராள மனப்பான்மை கொண்டவர் வேறு யார் இருக்க முடியும்? ஆனால் அன்னாரைப் பற்றி இவ்வாறு (அறிவிப்பில்) வருகின்றது:

அதாவது, அன்னார் (ஸல்) துஆ செய்யும் போது, சில சமயங்களில் அன்னாரது நெஞ்சில் இருந்து (உலையில்) பானை கொதிக்கும் சத்தத்தைப் போன்ற ஒரு சத்தம் வந்து கொண்டிருந்தது. மேலும் அன்னாரது அருளுக்குரிய தாடி (கண்ணீரால்) நனைந்துவிடும்.

ஆனால், ஏராளமான நபர்கள் எத்தகையவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் தங்களது பழக்கவழக்கங்களின்படி வல்ல இறைவனிடம் கூட ஆணவம் கொள்கின்றனர்;மேலும், அவர்கள் துஆக்களில் அழுவதை விரும்புவதில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்களின் நூல்,அஸ் ஸீரத்துன் நபி (ஸல்) பாகம் 2, பக்கம் 149)

தொழுகையில் உருக்கம் ஏற்படுவதும் மிகவும் அவசியமாகும். இதற்காகவும் மனிதன் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்தவொரு வழிமுறையைக் கூறியுள்ளார்கள்:

அதாவது உங்களது முகத்தில் அழுவது போன்ற பாவனையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.அப்போது, இதே வெளிப்புற நிலையினாலும் உள்ளத்தில் தாக்கம் ஏற்படும். பிறகு மனிதனுக்கு அழுகையும் வந்துவிடும்.

(மல்ஃபூஸாத், பாகம் 4, பக்கம் 79 - பதிப்பு 2022)

எனவே, எனது இறை வணக்கங்களின் தரம் இவையாகும்; மேலும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அல்லாஹ்வின் அருள் என்னைக் காப்பாற்றும்; அந்த அருளைப் பெறுவதற்காக நான் இறை வணக்கமும் செய்கிறேன்; மேலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக நான் அவனுக்கு நன்றியும் செலுத்துகிறேன்; ஏனெனில் அல்லாஹ் தேவையற்றவன் ஆவான்; நான் நன்றி செலுத்தாவிட்டால் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொள்வான்? என்று யாருக்குத் தெரியும்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள்.

எனவே, அனைத்து நன்மைகளின் தலைவராக திகழ்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்ற ஒரு மனிதர் கூட நற்செயல்களில் இருந்து விலகி இருக்க முடியாதபோது, மற்றவர்கள் நாம் செயல்கள் செய்யத் தேவையில்லை என்று எவ்வாறு கூற முடியும்?

எங்களுக்கு அமல்கள் தேவையில்லை; அல்லாஹ் மன்னித்து விடுவான் என்று கூறுவதோ காஃபிர்களின் கூற்றாகும். அது நம்பிக்கையாளரின் கூற்று அல்ல.

( ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களின் நூல் , அஸ் ஸீரத்துன் நபி (ஸல்) பாகம் 2, பக்கம் 183)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை தியானமும் ஒரு சுன்னத்தாகும் .

அன்னார் (ஸல்) இறை தியானம் செய்து வந்தார்கள். இது குறித்தும் ஒரு சொற்பொழிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) எடுத்துரைத்தார்கள்:

திக்ருகளில் ஒரு திக்ர் தூங்கும் நேரத்தில் செய்யப்படும் திக்ர் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூங்கச் செல்லும் போது ஆயத்துல் குர்ஸி மற்றும் ஸூரா இக்லாஸ், ஸூரா அல் ஃபலக் மற்றும் ஸூரா அந்நாஸ் போன்ற திருக்குர்ஆனின் இந்த மூன்று கடைசி சூராக்களை மூன்று முறை ஓதி கைகளில் ஊதுவார்கள். பின்னர் கையை உடலில் தேய்ப்பார்கள். அன்னார் (ஸல்) கைகளில் ஊதி கைகளை உடலில இவ்வாறு தேய்ப்பார்கள். அதாவது, தலையில் இருந்து ஆரம்பித்து, கைகள் எட்டும் இடம் வரை தேய்ப்பார்கள்.

இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத் ஆகும். இதை அன்னார் (ஸல்) ஒரு மார்க்கப் பணியாகக் கருதி முறையாகவும் எப்போதும் கடைப்பிடித்து வந்தார்கள்.

இந்த திக்ரை, அதாவது இரவில் ஆயத்துல் குர்ஸி மற்றும் மூன்று 'குல்' (சூராக்கள்) ஓதுவதை அன்னார் (ஸல்) எப்போதும் செய்து வந்ததார்கள். எனவே இந்த சுன்னத்தை ஒவ்வொரு முஸ்லிமும் பேண வேண்டும். இன்னும் கூறப்போனால், அதைத் தனது வாழ்க்கையின் ஒரு முக்கியப் பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஆக, இந்த திக்ரை கைவிட்டு விடுவதால் நரகத்திற்குச் சென்று விடுவோம் என்று எண்ணமும் கூடாது. அதேபோன்று, இந்த திக்ர் மட்டுமே சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப் போதுமானது; மற்ற செயல்கள் தேவையில்லை என்றும் எண்ணக் கூடாது.

கடமையானவற்றை நிறைவேற்றவும் வேண்டும்.

சிலர் எனக்கும் கடிதம் எழுதுகின்றனர்; மேலும், ஏதேனும் சிறிய துஆவைக் கூறுங்கள்; மேலும், எங்களிடம் நன்மைகள் உருவாகிவிடும் பொருட்டும், எங்களது பாவங்கள் அழிந்து விடும் பொருட்டும், எங்களது காரியங்கள் நிறைவேறி விடும் பொருட்டும், அல்லாஹ்வின் நெருக்கமும் கிடைத்து விடும் பொருட்டும் ஏதாவது திக்ரைக் கற்றுத்தருமாறு கேட்கின்றனர்.

ஆனால், முதல் விஷயம் இறை வணக்கமாகும். அதாவது கடமையான தொழுகைகள் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடமையான தொழுகைகளுக்குப் பிறகு நஃபில் தொழுகைகளையும் தொழுது வந்தார்கள். எனவே அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராவதற்கான அந்த தரத்தை அடைவது முதலில் அவசியமாகும். அதன் பிறகுதான் நஃபில்கள் ஆகும். பின்னர் இறை தியானம் ஆகும். திக்ர் மனிதனை கூடுதல் நற்செயல்களின் பக்கம் கவனமூட்டுகிறது. ஆனால், அதனுடன் சேர்த்து மற்ற நற்பண்புகளையும், செயல்களையும் கடைப்பிடிப்பது அவசியமாகும். உயர்ந்த ஒழுக்கத்தை ஒரு மனிதன்

கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், துஆக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கும் அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையின்படி அமல் செய்ய வேண்டும்; மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு நமக்கு அமல் செய்து காட்டினார்களோ அவ்வாறு செய்ய வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். மேலும், அந்த முழுமையான சுன்னத்தின்படி செயல்பட வேண்டும்.

எவ்வாறாயினும், இறை தியானம் குறித்து, இதை கைவிடுவதால் நாம் நரகத்திற்குச் சென்று விடுவோம் என்றோ அல்லது இந்த திக்ர் மட்டுமே நம்மைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் என்றோ அல்லது இதன் மூலம் நமது அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றோ கருதக் கூடாது. அமல்கள் எவ்வாறிருப்பினும் அவசியமாகும். மேலும் கடமைகளும் அவசியமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்ற ஒரு மனிதர் தமது முன்னேற்றத்திற்காக இந்த திக்ருகளைச் செய்வதற்கு தேவையுடையவராக இருந்தார்கள். அவ்வாறிருக்க, எங்களுக்கு அத்தகைய திக்ருகள் தேவையில்லை என்று நாம் எவ்வாறு கூற முடியும்?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத் யாதெனில், முன்னர் எடுத்துரைக்கப்பட்டது போன்று அன்னார் (ஸல்) எப்போதும் தூங்கும் போது ஆயத்துல் குர்ஸி மற்றும் மூன்று 'குல்'(சூராக்)களை மூன்று முறை ஓதுவார்கள். மேலும் கைகளில் ஊதி உடல் முழுவதும் தேய்ப்பார்கள்.

( குத்பாத்தே மஹ்மூத், பாகம் 11, பக்கம் 19-21)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேலும் சில விஷயங்களின் பக்கமும் மிகவும் விரிவாகக் கவனமூட்டியுள்ளார்கள். ஓரிடத்தில் அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள்:

மார்க்கத் தலைவர்களாக இருக்கும் மக்கள், தங்களின் இறை வணக்கங்களும், திக்ருகளும் மற்றவர்களை விட அதிகமாக இருப்பதாகப் பெருமை கொள்கின்றனர். சில சமயங்களில் எவர்கள் மார்க்கத் தலைவர்களாக இருக்கின்றனரோ அவர்களிடம் இந்த எண்ணம் அதிகமாக இருக்கின்றது, அதாவது, மற்ற மக்களைக் காட்டிலும் தங்களது இறை வணக்கங்களும், திக்ருகளும் அதிகமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

சிலர் எப்படிப்பட்ட மக்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் மார்க்கத் தலைவர்களாக இருக்கின்றனர்; தங்களைத் தாங்களே மார்க்க அறிஞர்கள் என்று கூறிக் கொள்கின்றனர்; அல்லது மார்க்க அமைப்புகளின் தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தங்களது இறை வணக்கங்கள் மற்றவர்களை விட அதிகமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். பின்னர், மக்கள் தங்களை நல்லவர்கள் என்று கருத வேண்டும் என்பதற்காக விசேஷமாக பகட்டுடன் அவர்கள் செயல்படுகின்றனர். பெரிய தலைவர்கள் இருக்கின்றனர்; அரசியல்வாதிகளும் கூட தற்போது இவ்வாறு செய்யத் தொடங்கி விட்டனர். அதாவது, அவர்களின் கைகளில் தஸ்பீஹ் (திக்ர் மாலைகள்) இருக்கின்றன.

பள்ளிவாசலின் இமாம்கள் உள்ளனர்; அமைப்பின் நிர்வாகிகள் இருக்கின்றனர்; அவர்கள் தங்களை உலகிற்கு முன்மாதிரியாகக் கருதுகின்றனர். அல்லது நாங்கள் உங்களுக்கு முன்மாதிரிகள் ஆவோம் என்ற இந்த உணர்வை பிறருக்கு ஊட்டுவதற்கு முயற்சி செய்கின்றனர். எனவே பகட்டுத்தன்மையை மேற்கொள்கின்றனர். முஸ்லிம்களிடமும் இந்த விஷயங்கள் இருக்கின்றன. மேலும், முஸ்லிமல்லாத தலைவர்களிடமும் இந்த பகட்டுத்தனம் காணப்படுகிறது. சில கோத்திரங்களின் மரபுகளிலும் இத்தகைய விஷயங்கள் காணப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், முஸ்லிம்கள் என்றால், அவர்கள் தங்களது ஆன்மீக நிலையை வெளிப்படுத்துகின்ற நிலை இவ்வாறு இருக்கின்றது. அதாவது அவர்கள் உளூச் செய்யும்போது சிறப்பு ஏற்பாட்டுடன் மிக நீண்ட நேரம் உறுப்புகளைக் கழுவுகின்றனர். எந்த அளவிற்கு என்றால், உளூச் செய்யும்போது, விழுகின்ற அந்த தண்ணீர்த் துளிகள் கூட உடலின் மீது படக் கூடாது; அதனாலும் அசுத்தமடைந்து விடுகின்றது என்று கூறுகின்றனர், நீண்ட நெடிய ஸஜ்தாக்களும், ருகூக்களும் செய்கின்றனர். தங்களது முகப் பாவனையால் பிறருக்கு காட்டுவதற்காக மட்டும் இறையச்சத்தையும், உருக்கத்தையும் வெளிப்படுத்துவார்கள். அல்லாஹ்வின் அன்பை பெறுவதற்காக செய்கின்றனர் என்றால் அது வேறு விஷயம். ஆனால், இவர்களோ உலகிற்கு காட்டுவதற்காக இவ்வாறு செய்கின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்ற அனைவரையும் விட இறைவனுக்கு அஞ்சியவர்களாகவும், சிறந்த ஒழுக்கம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஆனால், இத்தகைய பகட்டுத்தனம் எதுவும் அன்னாரிடம் இருந்ததில்லை. அன்னாரின் வாழ்க்கை மிகவும் எளிமையானதாக இருந்தது.

ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நான் சிலநேரம் தொழுகையில் நிற்கும்போது, அதை நீளமாகத் தொழ வைக்க வேண்டும் என்று எண்ணம் கொள்கிறேன். ஆனால் ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்கும்போது, அந்தக் குழந்தையின் தாயை சிரமத்தில் ஆழ்த்தி விடக் கூடாதே என்ற அச்சத்தால் நான் தொழுகையைச் சுருக்கிக் கொள்கிறேன்'. நாம் குழந்தையின் அழுகுரலைக் கேட்டு தொழுகையை சுருக்கிக் கொள்கிறோம் என்று எவ்வளவு எளிமையுடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று பாருங்கள்!

இதுபோன்ற கூற்றை இன்றைய காலத்து சூஃபிமார்களோ தங்களின் இழுக்காக கருதுவார்கள். நாங்கள் தொழுகையில் எந்த அளவிற்கு மூழ்கிவிட்டோம் என்றால் எங்களுக்கு எதுவும் தெரிவதில்லை ; பக்கத்தில் மேளம் அடித்தால் கூட எங்களுக்கு தெரியாது என்பதை வெளிப்படுத்துவதை அவர்கள் தங்களது பெருமையாகக் கருதுகிறார்கள்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இத்தகைய செயற்கையான தன்மைகளிலிருந்து தூயவராக இருந்தார்கள். அன்னாருக்கு கிடைத்திருந்த மகத்துவம் என்பது இறைவனால் வழங்கப்பட்டிருந்ததே தவிர மனிதர்கள் அன்னாரை கண்ணியத்திற்குரியவராக ஆக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மனிதர்களிடமிருந்து எந்த எதிர்பார்ப்பும் இருந்ததில்லை. அன்னாரின் அல்லாஹ்விடம் கண்ணியத்தை விரும்பியிருந்தார்கள். எனவே அன்னார் (ஸல்) இந்த விஷயங்களிலிருந்து தூயவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை, அன்னாரிடம் அதாவது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலணிகளுடன் (Shoes) தொழுதிருக்கின்றார்களா? என்று கேட்கப்பட்டது.

தற்போது, ஒருபக்கம் இறை வணக்கமாக இருக்கின்றது; மேலும் நல்ல தரத்தையும் பெற வேண்டியது இருக்கின்றது. ஆனால், அஸர் தொழுகையின் நேரத்தைக் குறித்து, எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கூறியிருந்ததைப் போன்று எங்கு எளிமை அவசியமோ அங்கு எளிமையை மேற்கொள்வதும் அவசியமாகும்.

அதற்கு, 'ஆம்! என்று அவர் பதிலளித்தார்.

அல்லாஹ்வை வணங்குவதை கருத்தில் கொள்ள வேண்டும்; மேலும் அவனது விருப்பத்தைப் பெறுவதின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். இதுவே அசல் விஷயமாகும்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலணிகளுடன் (Shoes) தொழுதிருக்கின்றார்களா? என்று அன்னாரிடம் கேட்கப்பட்டது. அதற்கு, ஆம்! அன்னார் (ஸல்) அவ்வாறு தொழுது வந்தார்கள் என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

முஸ்லிம்களில் சிலர் இஸ்லாத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர்; இன்னும் கூறப்போனால், இஸ்லாமிய போதனைகளை அறியாமல் இருக்கின்றனர். யாராவது காலணியுடன் தொழுவதைக் கண்டு விட்டால் கூச்சலிடுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு அழகிய முன்மாதிரியாக இருக்கின்றார்கள்.

நமது ஓர் அஹ்மதி எனக்கு கடிதம் எழுதினார். ஒருவர் அவரிடம் இவ்வாறு கூறினார்: அதாவது 'நீங்கள் இந்த கலிமாவை கூறுகின்றீர்களா? அல்லது இன்னாரின் கூற்றை கூறுகின்றீர்களா?

அதற்கு அந்த அஹ்மதி கூறினார்: நீங்களோ தொழுவதில்லை ; திருக்குர்ஆனும் ஓதியது கிடையாது ; உங்களுக்கு என்ன தெரியும்? உங்களுக்கு இந்த விஷயங்களுடன் என்ன தொடர்பு உள்ளது? அதற்கு அந்த நபர் கூறினார்: எனக்கு தெரிகின்றதோ? இல்லையோ! அது வேறு விஷயம். நீங்கள் காதியானிகள் ஆவீர்கள்; மிர்ஸாயிகள் ஆவீர்கள். எனவே நீங்கள் தொழக் கூடாது; இங்கு வரக் கூடாது. ஆக, இது இன்றை நாட்களிலும் மக்களின் நிலை இவ்வாறே இருக்கின்றது.

எவ்வாறிருப்பினும், இறை வணக்கத்திற்குத் தூய்மையும், சுத்தமும் நிபந்தனையாகும். மேலும்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 16 -23 APR 2026 Issue No. 16 &17

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இந்த விஷயம் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

எனவே சுத்தமான காலணிகளை அணிந்து, பொதுவாக எந்த இடங்களில் அசுத்தம் ஏற்பட்டுவிடுவதற்கான அபாயம் இருக்குமோ, அங்கு தேவையான நேரத்தில் காலணி அணிந்து தொழுவது தவறில்லை. தூய்மையான இடங்களில் காலணிகளுடன் தொழுவதில் தவறில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்து முஹம்மதிய்ய சமுதாயத்தின் மீது ஒரு பெரும் உபகாரம் செய்துள்ளார்கள். இதனால் பிற்காலத்தில் மக்கள் தேவையற்ற சிரமங்களிலிருந்து தப்பித்துக் கொண்டனர்.

எந்த செயலால் இறைவனின் மகத்துவம் மற்றும் இறையச்சத்தில் வேறுபாடு ஏற்படாதோ அதனை செய்வதால் மனிதனின் கண்ணியத்திலும் வேறுபாடு ஏற்பட முடியாது.

( அன்வாருல் உலூம், தொகுதி 12, பக்கம் 517-519)

ஹதீஸில் வருகின்றது. தொழுகை என்பது இறைவனுக்கும், அடியானுக்கும் இடையிலான சந்திப்பிற்கான ஒரு வழிமுறையாகும். இதன் மூலம் நபியாக இருப்பவருக்காக அல்லாஹ் உருவாக்க விரும்புகின்ற இறைத்தன்மையின் அந்த நிறத்தை இறைவன் நம்பிக்கையாளர்களின் மீது பூசுகின்றான். அவர்கள் அல்லாஹ்வின் நிறத்தில் மூழ்கிவிடுகின்றனர்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஜமாஅத்துடன் தொழுவதில் எவ்வளவு ஆர்வம் காட்டினார்கள் என்றால், ஒருமுறை ஒரு கண்பார்வையற்ற தோழர் அன்னாரிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது வீடு பள்ளிவாசலிலிருந்து வெகு தொலைவில் உள்ளது; மேலும் மஸ்ஜிதிற்கு வந்தடைவதும் மிகவும் சிரமமாக உள்ளது; எனவே, தாங்கள் அனுமதி நல்கினால் நான் மழைக் காலங்களில் எனது வீட்டிலேயே தொழுது கொள்வேன் என்று கூறினார்.

மதீனாவில் அப்போது மண் வீடுகள் இருந்தன. மழையினால் தெருக்களில் தண்ணீர் தேங்கி நின்று விடும்; வீடுகளின் சுவர்களை ஒட்டியே நடக்க வேண்டியிருக்கும். ஆனால், மழைநீரிலிருந்து சுவர்களைப் பாதுகாக்க அந்த சுவர்களில் கற்களைப் பதிக்கும் நடைமுறை இருந்து வந்தது.

அந்த கண்பார்வையற்ற தோழர் கூறும்போது, 'பாதையின் நடுவில் என்னால் நடக்க முடியாது, ஓரங்களில் நடந்தால் எனக்குக் கண் தெரியாததால் அங்கிருக்கும் கற்கள் என் கால்களில் படும்; இதனால் நான் காயமடைந்து கீழே விழுந்துவிடும் அபாயம் உள்ளது. எனவே, நான் வீட்டிலேயே தொழலாமா?' என்று அவர் கேட்டார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், சரி! உமக்கு சிரமம் இருந்தால் அங்கேயே தொழுது கொள்வீராக! என்று கூறினார்கள். அவர் அங்கிருந்து சிறிது தூரம் சென்ற பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், 'அவரை மீண்டும் அழைத்து வாருங்கள்' என்று கூறினார்கள். அவர் வந்ததும், 'உம் வீட்டிற்கு பாங்கு சத்தம் கேட்கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு, 'ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கேட்கிறது' என்று அவர் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'அப்படியானால், நீர் இடறி விழுந்தாலும் அல்லது காயமடைந்தாலும் மஸ்ஜிதிற்கு வந்துதான் தொழ வேண்டும்' என்று கூறினார்கள்.

( தஃப்ஸீர் கபீர், தொகுதி 10, பக்கம் 23-25, 2022 பதிப்பு)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மீண்டும் கூறுகின்றேன்: اُكُلُهَا دَآئِمٌ (அர் ரஃது: 36)

இறைவனின் அன்பெனும் மரத்தின் நிழலில் வளருபவர்கள், அங்கே நற்கனிகளைப் பெறுவார்கள். 'அந்த சுவையான, தூய கனிகள் அவர்களிடம் வெளிப்படும்.

நினைவில் கொள்ளுங்கள். இதுவே சூஃபிகளின் பயணத்தின் இறுதி இலக்கு. இங்கே ஒருவர் வந்து சேர்ந்தால், அவர் இறைவனின் தரிசனத்தை மட்டுமே காண்பார். அன்னார் (அலை) மேலும் கூறுகின்றார்கள்:

தஅப்புத் நிலை அதாவது சரியான இறை வணக்கத்தின் நிலையின் பெயரே உண்மையான இறை வணக்கமாகும். அத்தகைய நிலையில், அதாவது எந்த நிலையில் மனிதனுக்கு இறைவன் நினைவு இருப்பானோ, மேலும் எந்த இறை வணக்கத்தின்போது, அல்லாஹ் மட்டுமே அவனுக்கு முன்னால் இருப்பானோ அதுவே அசல் இறை வணக்கமாகும்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்:

اِنَّنِیْ لَکُمْ مِّنْهُ نَذِیْرٌ وَّبَشِیْرٌ

நிச்சயமாக நான் உங்களுக்கு அவனிடமிருந்து எச்சரிக்கை செய்பவனாகவும், நற்செய்தி கூறுபவனாகவும் இருக்கிறேன்' (ஹூத்: 3).

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த 'தஅப்புத்' அதாவது முழுமையான அடிமைத்துவம் என்பது இறைவனுக்காகவே முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட தூய இறை வணக்கத்தின் பெயராகும். இது ஒரு மகத்தான பணியாகும். மனிதன் ஒரு அழகிய முன்மாதிரி இல்லாமல், முழுமையான முன்மாதிரி இல்லாமல் இதனை செய்ய முடியாது. ஒரு பரிசுத்த ஆற்றலின் முழுமையான தாக்கம் இன்றி அந்த மனிதரால் இதனை செய்ய முடியாது. அதனால்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இறைவனிடமிருந்து எச்சரிப்பவனாகவும், நற்செய்தி வழங்குபவனாகவும் வந்துள்ளேன். நீங்கள் எனக்குக் கட்டுப்பட்டு நடந்தால், என்னை ஒப்புக் கொண்டால் பின்னர் உங்களுக்கு பெரும் பெரும் நற்செய்தி இருக்கின்றது. ஏனெனில் நான் உங்களுக்கு நற்செய்தி வழங்குபவன் ஆவேன்; நீங்கள் என்னைப் புறக்கணித்தால் நினைவிற் கொள்ளுங்கள்! நான் எச்சரிப்பவனாக வந்துள்ளேன் . பின்னர் உங்களுக்கு பெரும் பெரும் ஆக்கினைகளையும், துன்பங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.

( மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 472-473, 2022 பதிப்பு)

ஆக, இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், நாம் இதை ஆழமாகச் சிந்தித்து பார்க்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றியவாறு அன்னாரை நாம் ஒப்புக் கொண்டுள்ளோம்; மேலும் அன்னாரை நற்செய்தி வழங்குபவராக ஒப்புக் கொண்டுள்ளோம். அந்த நற்செய்திகளை நாம் எப்போது பெற முடியும் என்றால், நமது இறை வணக்கங்களுக்கு உரிய உரிமைகளை செலுத்த வேண்டும்; மேலும், அன்னாரின் முன்மாதிரியின்படி நடப்பதற்கு அந்த தரத்தையும் பெறக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். நினைவிருக்கட்டும். முயற்சிகள் செய்வதற்கு தியாகங்கள் செய்ய நேரிடும். பெரும் முயற்சி செய்ய நேரிடும். சில மக்களிடம் கேட்கும்போது, ஐவேளைத் தொழுகைகளை தொழுவதற்கு நாங்கள் முயற்சி செய்கின்றோம் என்று அவர்கள் கூறிவிடுகின்றனர். அவர்களின் நஃப்ஸ் அவர்களை ஏமாற்றுகின்றது. முயற்சி உண்மையானதாக இருந்தால் ஒரு கவலை இருக்கும்.

(தொடரும்..) தமிழாக்கம்


முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

**National Watch Company**

**Sales & Service**




B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad